Registered with Registrar of News Papers for India RNI No. TNBIL/2018/76375 (R.Dis No. 599/2018)
Postal Registration No. TN/ARD/106/2018-2020, WPP Licence No. : TN/PMG(CCR)/WPP/607/2019-2020
Posted at Egmore RMS (Patrika Channel) Date of Publishing Second week of every month
Posted on 15 - 17th of every month - Posted on 17.03.2020



மாநிலச் செயலாளர் என்.பழனி அவர்கள்
இல்லத் திருமண விழா



உலக மகளிர் தின விழா 8 மார்ச் 2020



செல்வி K. மீனாட்சி ஏற்புரை



நீகர் கலைக்கூடத்திற்கு பாராட்டு

Printed by D.Babu, Published by A.Sekkizhar on behalf of Tamil Nadu Electricity Board Employees Federation
39/101 Singanna Street, Chintadripet, Chennai 600002
and Printed at Sri Raj Cine Printers No.177/72, Singanna Street, Chintadripet, Chennai 600002.
Editor : A. SEKKIZHAR



# TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்

## TNEB EMPLOYEES' FEDERATION NEWS

Volume -2 Issue - 8 March 2020
மலர் - 2 இதழ் - 8 மார்ச் 2020
Monthly Magazine
மாத இதழ்
Bilingual
Tamil & English
Price - Rs.10/-
விலை ரூ. 10/-

ஆசிரியர் : அ.சேக்கிழார்



புதிய தலைமைப் பொறியாளர் (பணியமைப்பு)
அவர்களுக்கு வாழ்த்து



சர்வதேச மகளிர் தினம்
சிறப்பு விருந்தினர் SE/GCC/CBE

மகளிர் தின சிறப்பிதழ் வெளியீடு 8 மார்ச் 2020





சாதனைப் பெண்மணிகளுக்கு விருது

தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் வெளியீடு


Er. R.சித்ரா – வாழ்நாள் சாதனையாளர் விருது


Dr. கலா மகேசுவரன் – மருத்துவ மாமணி விருது


த.பரிமளாதேவி – தமிழ்ப்பணிச் செம்மல் விருது


Er. ப.வீரலட்சுமி – சுண்டாட்ட வீராங்கனை விருது


ந.பரஞ்சோதி – வாழ்நாள் சாதனையாளர் விருது


P. சீதா – வாழ்நாள் சாதனையாளர் விருது


ம.ஜெயமேரி – வாழ்நாள் சாதனையாளர் விருது


R.ரீபா ஜரின் ஜெய கிரேஸ் – சிறந்த செவிலியர் விருது


சுஜாதா நாச்சியப்பன் – சமுதாயப் பணிச்செம்மல் விருது


ஷாலினி ஜெரால்ட் – தமிழ்ப்பணிச் செம்மல் விருது


P.S. மெய்யுஸ்ரீ – இளம் சாதனையாளர் விருது


செல்வி K.மீனாட்சி – சிறந்த பெண்மணி விருது




நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள்
B. இந்து – Er. R. நாகராஜ்


விருது வழங்கிச் சிறப்புரை Er.K.N. சாந்தினி SE/CCC/CBE









# மகளிர் தின விழாவை சிறப்பித்தவர்கள்













TNEB
எம்ப்ளாயீஸ்
பெடரேஷன் நியூஸ்

மலர்-2 ✧ இதழ்-8 ✧ மார்ச் 2020

நிர்வாக ஆசிரியர்

**அ. சேக்கிழார்**

ஆசிரியர் குழு

**சு. மணிகண்டன்**
**J.L. பாஸ்டின் ராஜ்**
**S. இராமநாதன்**
**K. செல்வராஜூ**
**R. ஜெயராமன்**
**வீ. பாரதி**

செயலாளர் (வெளியீடு)

**A. செந்தில்குமார்**



39/101, சிங்கண்ண தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.
✆ : 9841446621
tnebemployeesfederation3600@gmail.com


# பொருளாதரத்தைப் பெருக்க நடவடிக்கை எடுத்திடுக!

*பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்*
*பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்!!* – மகாகவி பாரதி.

மகளிர் தினம் கொண்டாடும் மார்ச் மாதத்தில் தலைமைப் பொறியாளர் (பணியமைப்பு) பதவிக்கு முதன் முறையாக பெண் பொறிஞர் பதவியேற்றுள்ளது பெருமைக்குரிய ஒன்றாக கருதுகிறோம். சவாலான பணிகளை சாதிக்கும் வல்லமை கொண்ட பொறிஞராக சரித்திரம் படைக்கட்டும். வாழ்த்துகள்.

பஞ்சாயத்து முதல் பாராளுமன்றம் முதல் பெண்களுக்கு உரிய பிரதிநிதித்துவமும், முக்கியத்துவமும் ஓரளவிற்கு இருந்தாலும் பெண்களுக்கான பாதுகாப்பில் இன்னும் கவனம் செலுத்திடல் வேண்டும் என்பதை அனைவரும் உணர்ந்திடல் வேண்டும்.

உலக மகளிர் தினம் என்பது சம்பிரதாயத்திற்கு இல்லாமல் விழிப்புணர்வு மிக்க நாளாக அமைந்திடல் வேண்டும். 2020 மார்ச் 8ல் மகளிர் சாதனையாளர்களுக்கு கடந்த ஆண்டைப் போலவே இவ்வாண்டும் விருதுகள் வழங்கி கோவையில் விழா சிறப்புடன் நடைபெற்றுள்ளது.

தொழிலாளர்களுக்கு கிடைத்திட வேண்டிய GPF, Surrender, TA Bill, Night Shift Allowance, MRI Bill என எந்த தொகையும் 6 மாதங்களுக்கு மேலாக பட்டுவாடா செய்யப்படாமல் உள்ளது.

தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல; மின்சாரம் வாங்கியதற்கான கட்டணம், ஒப்பந்ததாரர்கள் செய்த பணிக்கான தொகை என எதுவும் செலுத்த முடியாத நிலை வாரியத்தை நிலைகுலையச் செய்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வங்கிகள் கடன் கொடுக்க மறுத்தால் ஊதியமில்லை என்ற நிலை வருமோ என பரவலாக பேசப்படுகிறது. கடன் பெறுவதற்கான வங்கிகள் ஏதும் மீதம் இல்லையென்றும் கூறுகிறார்கள்.

மின்சாரத் தொழிலை பாதுகாக்க வேண்டாமா? மின்சாரத் தொழிலாளர்களின் நிலைமையை பற்றி கவலைப்பட வேண்டாமா?

ஆட்சியாளர்களின் அறிவிப்புகள் அதிர்ச்சிக்குள்ளாகுகின்றன. மின்சாரம் சேவைத்துறைதான் இல்லையென்று சொல்வாரில்லை. வாக்கு வங்கிக்காக மின்சார வாரியத்தை நஷ்டத்தில் இயக்க முடியாது. மின்சார வாரியத்தின் பொருளாதாரத்தை பெருக்க தயங்காமல் நடவடிக்கை எடுக்க அரசு முன் வர வேண்டும்.

நீதிமன்ற வழக்கு நிலுவையில் - கேங்க்மேன் எழுத்துத் தேர்வு நடக்கிறது.

நீதிமன்ற வழக்கு நிலுவையில் - இளநிலை உதவியாளரிலிருந்து - உதவியாளர் (நிர்வாகம் - கணக்கு) பதவி உயர்வு நிலுவையிலே உள்ளது.

நீதிமன்ற வழக்கு முடிவு - இளநிலை பொறியாளர் முதல் நிலை பதவி உயர்வு- முடிவெடுக்கப்படாமலே உள்ளது.

கணக்கீட்டாளரிருந்து - கணக்கீட்டு ஆய்வாளர் பதவி உயர்வு ஒதுக்கீடு தாமதத்திற்கு யார் காரணம்?

தொழில்நுட்ப உதவியாளர் (மின்னியல்) உள்முகத் தேர்வு விபரங்கள் கோரப் பெற்று ஓராண்டாகிறது. உதவிப் பொறியாளர் (இயந்திரவியல்) உள்முகத் தேர்வு 6 ஆண்டுகளுக்கு மேலாக விவரங்களே கேட்கப்படவில்லை. இளநிலை உதவியாளர் (நிர்வாகம்) உள்முகத் தேர்வு - விவரங்கள் கேட்டு பெறப்படுமா?

இன்னபிற கோரிக்கைகள் மீது தொழிலாளர்களின் எதிர்பார்ப்பு காலங்கடந்து கொண்டேயிருந்தால் எதிர்ப்பாக மாறும் என்பதை வாரியம் அறிய வேண்டாமா?

***– ஆசிரியர்***

# 2020 சர்வதேச மகளிர் தின விழா!

2020ம் ஆண்டு சர்வதேவ மகளிர் தின விழா மார்ச் 8ம் நாள் காலை 10.30 மணிக்கு கோவை காந்திபுரம் 100 அடி சாலையில் உள்ள மலையாளி சமாஜத்தில் TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மகளிரணி சார்பாக மகளிரணி செயலாளர் திருமதி **M. பாரதி** தலைமையில் சிறப்புடன் நடைபெற்றது.

மகளிரணி மாநில இணைச் செயலாளர்கள் திருமதி. **P. தமிழரசி,** திருமதி **P. பானுமதி** மற்றும் கோவை வட்ட இணைச் செயலாளர்கள் கோவை தெற்கு, திருமதி. **G. கவிதா,** கோவை வடக்கு, திருமதி. **L. ஹெப்சிபா,** கோவை மாநகர், திருமதி. **M. கவிதா,** கோவை GCC, திருமதி. **C. கண்ணகி,** திருப்பூர், திருமதி. **E. மோகனப்ரியா,** உடுமலைப்பேட்டை, திருமதி. **T. சசிகலா,** பல்லடம், திருமதி. **சுதா,** உடுமலை காற்றாலை **M. சாவித்திரி** மற்றும் கோவை மண்டலத்திலுள்ள முக்கிய மகளிர் தோழியர்கள் முன்னிலை வகித்தனர்.

மகளிர் தின விழா தொடக்க நிகழ்வாக நிகர்கலைக் கூடம் வழங்கிய பறையிசை விண்ணைப் பிளந்தது மட்டுமல்ல அரங்கில் அமர்ந்திருந்த அனைவரையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தியது.

பள்ளி, கல்லூரி மாணவர்கள், தனியார் நிறுவனத்தில் பணியாற்றுபவர்கள், பொறிஞர்கள் என பலதரப்பட்டவர்களும் பறையிசை பயின்றுள்ளதும் ஆண் பெண் வித்தியாசமின்றி கல்லூரி மாணவிகள் பறையிசை கற்று வருவதும் மகிழ்ச்சியளிக்கக் கூடியதாக இருந்தது.

பறையிசைத்தவர்கள் அனைவரும் தங்களை அறிமுகப்படுத்திய விதமும் அழகு, மழலைச் செல்வங்கள் மகளிர் தின வாழ்த்துகளை தெரிவித்த விதமும் அழகோ அழகு.

நிகர்கலைக் கூடம் பறையிசை குழுவினருக்கு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் ஆகியோர் ஒன்றாக பறையிசை கலைஞர்களுக்கு பொன்னாடை போர்த்தி விருது வழங்கி கௌரவித்தார்கள்.

தமிழ்த்தாய் வாழ்த்துக்குப் பின்னர் TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மாநில பொருளாளர் மகளிர் தின முக்கியத்துவத்தை எடுத்துக் கூறி வருகை தந்திருந்த சிறப்பு விருந்தினரான கோவை GCC மேற்பார்வை பொறியாளர் பொறிஞர் **K.N. சாந்தினி** மற்றும் விருதாளர்கள், மகளிரணி நிர்வாகிகள் அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தி மகிழ்ந்தார்கள்.

மகளிரணி செயலாளர் மகளிர் தின விழா தலைமையுரையில் பெண்களின் பெருமைகளை குறிப்பிட்டு பேசினார்கள். பல்வேறு சிறப்புகளைக் கொண்ட விருதாளர்களும் விருதளிக்கும் நிகழ்வு குறித்து மகிழ்வோடு பேசி மின்சார வாரியத்தில் உழைக்கும் பெண்களுக்காக மகளிரணி சார்பாக எடுக்கும் நடவடிக்கைகள் குறிப்பிட்டு பேசி அரங்கில் அமர்ந்திருந்த மகளிரினரின் பாராட்டினை பெற்றார்கள்.

மகளிர் தின விழாவினை தொடக்கி வைத்து பேசிய பொதுச்செயலாளர் மகளிர் தின வரலாறுக்கான பெண்கள் போராட்டம் தொழிற்சங்க இயக்கமாக அடித்தளமிட்டதின் வரலாற்றினையும் கருத்தாலும் கரத்தாலும் உழைக்கும் பெண்களின் மேன்மையை நினைவு கூர்ந்தது மட்டுமல்ல மின்சார வாரியத்தை தாண்டி தமிழகத்தில் பொதுநல செயல்பாடுகளில் ஈடுபடும் மகளிரணி பெருமைப்படுத்தும் விதமாய் விருதுகள் வழங்கி சிறப்பிப்பதில் கடந்த ஆண்டு 10 மகளிருக்கும் விருது வழங்கியதைத் தொடர்ந்து இந்த ஆண்டு 11 மகளிருக்கு சாதனையாளர் விருதும் 2 மூத்த ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியைகள் செல்வி **K. மீனாட்சி,** திருமதி **M. கபரியேல்** ஆகியோருக்கு 2020 சர்வதேச மகளிர் தின சிறப்பு விருது வழங்குவது குறித்தும் குறிப்பிட்டு பேசி வருகை தந்த அனைவருக்கும் நன்றி கூறி விழாவினை தொடக்கி வைத்ததுடன்,

2020 மகளிர் தின விழா மலரை வெளியிட்டும், 2020 மகளிர் தின விழா மூத்த மகளிர்களுக்கான சிறப்பு விருதுகளையும் வழங்கினார்கள்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்த கோவை GCC மேற்பார்வை பொறியாளர் பொறிஞர் **K.N. சாந்தினி** அவர்கள் 1. **Er. R. சித்ரா** அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது, 2. **Dr. R. கலா மகேசுவரன்** அவர்களுக்கு மருத்துவமாமணி விருது, 3. **கவிஞர் பரிமளாதேவி** அவர்களுக்கு தமிழ்ப் பணிச்செம்மல் விருது, 4. **Er. P. வீரலட்சுமி** அவர்களுக்கு சுண்டாட்ட வீராங்கனை விருது, 5. **கவிஞர் பரஞ்ஜோதி** அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது, 6. **P. சீதா** அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது, 7. **M. ஜெயமேரி** அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது, 8. **R. ரீபா ஜரின் ஜெய கிரேஸ்** அவர்களுக்கு சிறந்த செவிலியர் விருது, 9. **சுஜாதா நாச்சியப்பன்** அவர்களுக்கு சமுதாயப் பணிச்செம்மல் விருது, 10. **கவிஞர் ஷாலினி ஜெரால்ட்** அவர்களுக்கு தமிழ்ப் பணிச்செம்மல் விருது, 11. **கவிஞர் PS. மெய்ஸ்ரீ** அவர்களுக்கு இளம் சாதனையாளர் விருது ஆகியோருக்கு விருதுகள் வழங்கி சிறப்பித்து, சாதாரணமாக தொழிற்சங்க செயல்பாடுகளில் கோரிக்கை, ஆர்ப்பாட்டம் என இருக்கும் நிலையில் மகளிரணி அமைத்து சமுதாயத்தில் சாதனையாளர்களை தேடி விருதளித்து பெருமைப் படுத்துகிற பெருமையாக கருதுவதாக குறிப்பிட்டு பேசியதுடன் மகளிரின் சிறப்புகளை எடுத்துக் கூறி சிறப்புரையாற்றினார்கள்.

மாநில இணைச் செயலாளர்கள் திருமதி **P. பானுமதி,** திருமதி **P. திமழரசி** ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

விருதாளர்கள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து ஏற்புரை நிகழ்த்தியது அனைவருக்கும் மகிழ்வினை தந்தது.

சிறப்பு விருந்தினரான மேற்பார்வை பொறியாளர் கோவை GCC அவர்களுக்கு விருது வழங்கி கௌரவித்து மாநில தலைவர் அவர்கள் விழா நிறைவுரையாற்றி பெண்களின் பெருமைகளை எடுத்துக் கூறி மகளிரணியினர் சிறப்பாக நடத்திய இவ்விழாவிற்கு உழைத்திட அனைவருக்கும் வாழ்த்துகளையும் நன்றிகளையும் தெரிவித்து நிறைவு செய்தார்கள்.

மகளிர் தின கவிதை கோவை மாநகர் மகளிரணி **ஆர். தனபாக்கியம்**மி அவர்கள் வாசித்தார்கள் அரங்கம் நிறைவாக கரவொலி எழுப்பி ஆர்பரித்த வேளையில் மாநில செயலாளர் **S. சதீஷ்சங்கர்** அனைவருக்கும் நன்றி தெரிவித்து உரையாற்றினார்கள்.

நாட்டுப்பண் பாடி கலந்து சிறப்பித்த அனைவரும் கலைந்து செல்லும் வேளையில் மகளிரணி சார்பாக மகளிர் அனைவருக்கும் பரிசுப் பொருள் வழங்கி சிறப்பித்தார்கள்.

விழா நிகழ்வினை சிறப்பாக தொகுத்தளித்த கோவை தலைமை அலுவலக மகளிரணி இணைச் செயலாளர் திருமதி **B. இந்து** அவர்களும், பொறிஞர் **R. நாகராஜ்** உதவி செயற்பொறியாளர் / சோமனூர் அவர்களுக்கும் பொன்னாடை அணிவித்து விழாக்குழுவினர் மகிழ்ச்சியடைந்தனர்.

விழா முழுவதும் இருவரும் இணைந்து தொகுத்தளித்து மிகவும் சிறப்பாக அமைந்திருக்கிறது.

மதிய உணவு உண்டு அனைவரும் கலைந்து செல்லும் வேளையில் அடுத்த மகளிர் தின விழா வரும் நாள் வரை இதுபோன்றதொரு மகிழ்வான நிகழ்வுக்கு காத்திருப்போம் என்ற ஏக்கம் கலந்த மகிழ்வோடு கலைந்து செல்கையில் விழா நிறைவுற்றது. விழா சிறக்க உதவிட்ட அனைவருக்கும் நன்றியும், வழ்த்துகளும் உரித்தாகுக.

தோழமையுடன்

**M. பாரதி,** மகளிரணி செயலாளர்

# செயற்குழு சுற்றறிக்கை

நாள் : 09.03.2020

**அன்பிற்கினிய தோழர்களே! வணக்கம்.**

தமிழ்நாடு எலக்டிரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மாநில செயற்குழு கூட்டம் 2020 மார்ச் 7ம் தேதி கோவை காந்திபுரம் 100 அடி சாலையில் உள்ள **மலையாளி சமாஜத்தில்** பெடரேஷன் தலைவர் தோழர் S. மணிகண்டன் அவர்கள் தலைமையில் சிறப்புடன் நடைபெற்றது.

செயற்குழு உறுப்பினர்கள் விவாதங்களுக்குப் பிறகு கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. **தமிழக மின்சார வாரியத்தில் காலியாக உள்ள செயலாளர் பதவியை வழக்கம்போல தலைமைச் செயலக பணியிலிருப்பவர்களை கொண்டு நிரப்பிட மின்சார வாரியத்தையும், தமிழக அரசையும் இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**
2. **மத்திய அரசுப் பணியில் NPSல் உள்ளவர்களுக்கு DGRG வழங்கிட உத்திரவிட்டுள்ளதை தமிழக அரசு அமல்படுத்தி மின்சார வாரியத்திற்கும் நீட்டித்து மின்சார வாரியத்தில் CPSல் பணி செய்து ஓய்வு பெறுபவர்களுக்கும் DGRG வழங்கி உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டுமாய் தமிழக அரசையும், மின்சார வாரியத்தையும் இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**
3. **வாரிசுக்கு வேலை கேட்டு அனுப்புவதில் 3 வருடத்திற்குள், 18 வயது முடியாமல், 8ம் வகுப்பு கல்வித்தகுதி இல்லாது விண்ணப்பித்து வேலை கிடைக்காமல் நீதிமன்ற வழக்கு மூலம் உத்தரவு பெற்றவர்களுக்கு நிராகரிக்காமல் வாரிசு வேலை வழங்கிட வேண்டுமென மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**
4. **உதவிப் பொறியாளர் (இயந்திரவியல்) உள்முகத் தேர்வுக்கு தகுதியுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கேட்டுக் பெற்று உள்முகத் தேர்வு செய்திட வேண்டுமென மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**
5. **Non-Diploma இளநிலை பொறியாளர் IIம் நிலை பதவி உயர்வு விரைந்து வழங்கிட மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**
6. **Technical Assistant (Electrical) உள்முகத் தேர்வு விவரங்கள் கேட்டுப் பெற்று ஒரு வருடமாகிறது. உடனடியாக உள்முகத் தேர்வினை முடித்து உத்தரவு வழங்கிட மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**
7. **GPF, Surrender, TA Bill, Night Shift Allowance, MRI Bill போன்றவைகள் 6 மாதத்திற்கு மேல் பணம் பட்டுவாடா செய்ப்படாமல் உள்ளதை விரைந்து தொழிலாளர்களுக்கு கிடைக்கும் அளவில் நிதி ஒதுக்கிட வேண்டுமாய் மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**
8. **உடுமலை மரபு சாரா எரிசக்தி மின்வட்டத்தில் உள்ள 5 தொழிற்நுட்ப உதவியாளர் பதவியை உடனே நிரப்பிடவும், திருநெல்வேலி மரபுசாரா எரிசக்தி வட்டத்தில் உள்ளது போல 2 கோட்டங்கள் உருவாக்கிட வேண்டுமென மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**

9. P&C வட்டம், Hydro Stations & GCC போன்ற வேலைபளு ஒப்பந்தத்தில் வராத பகுதிகளுக்கு புதிய பதவிகள் அனுமதித்திட பேச்சுவார்த்தை நடத்திட வேண்டுமென மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

10. விருப்ப மாறுதல் விண்ணப்பம் இணையத்தில் பதிவு செய்வதில் CE / Distribution என Option இல்லாததால் April முதல் தேதியில் வரும் காலியிடத்தில் உரிய முதன்மை பட்டியலோடு மாறுதல் செல்லும் விண்ணபத்தை சமர்ப்பிக்க இயலாத நிலை உள்ளது. தகுந்த மாற்றம் செய்திட வேண்டுமொய் இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

11. 2019ம் ஆண்டு வரவு செலவு அறிக்கையினை இச்செயற்குழு ஏற்று ஏகமனதாக ஒப்புதலளிக்கிறது.

12. தமிழ்நாடு மின்சார வாரிய வரைவாளர் சங்கத்தின் பொதுச்செயலாளரை நமது பெடரேஷனின் உபதலைவர்களில் ஒருவராக நியமிப்பது என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

13. 2020 ஏப்ரல் மாதத்தை உறுப்பினர் சந்திப்பு மாதமாக அறிவித்து செயல்படுத்துவது என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

14. 2020 ஏப்ரல், உறுப்பினர் சந்திப்பு மாதமாக கிளைகள் செயல்படுவதை கண்காணிக்கவும் ஆலோசனைகள் கூறவும் கீழ்கண்டவாறு பொறுப்பு அளிப்பது என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

| | |
|---|---|
| 1. சென்னை (தெற்கு, வடக்கு மண்டலங்கள்) | A. அருணாச்சலம், மாநில உபதலைவர்,<br>K. நாராயணமூர்த்தி, மாநில செயலாளர் |
| 2. விழுப்புரம் மண்டலம் | V. ரமேஷ், K. பஞ்சமூர்த்தி,<br>மாநில இணைச் செயலாளர்கள் |
| 3. ஈரோடு மண்டலம் | R. ஜெயராமன், மாநில உபதலைவர் |
| 4. கோவை மண்டலம் | J.L. பாஸ்டின்ராஜ், மாநில பொருளாளர் |
| 5. திருச்சி மண்டலம் | K. செல்வராஜ், மாநில செயல் தலைவர் |
| 6. மதுரை மண்டலம் | R. மூக்கையா, மாநில செயலாளர் |
| 7. திருநெல்வேலி மண்டலம் | N. முத்தையா, மாநில உபதலைவர் |
| 8. வேலூர் மண்டலம் | G.K. பாலகிருஷ்ணன், மாநில செயலாளர்<br>ராஜராஜன், வேலூர் திட்ட செயலாளர் |

15. பணிப் பகுதி வாரியாக தொழிலாளர் கோரிக்கைகள் குறித்து கலந்தாய்வு செய்வதற்கு கீழ்கண்ட நிர்வாகிகளை கமிட்டியில் இணைப்பது என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. களப்பணியாளர்கள் | : | K. செல்வராஜ், S. சதீஷ் சங்கர்,<br>G.K. பாலகிருஷ்ணன், K. நாராயணமூர்த்தி |
| 2. நிர்வாகப் பிரிவு | : | N. முத்தையா, K. காளிதாஸ், M. பாரதி, R. மூக்கையா |
| 3. கணக்குப் பிரிவு | : | R. ஜெயராமன், D. சாமுவேல் ஜான்சன் |
| 4. கணக்கீட்டாளர் பிரிவு | : | K.R. சுப்ரமணியம், S. இராஜாங்கம், K. சாரதி, R. காமராஜன் |
| 5. பண்டக சாலை பிரிவு | : | K. ஞானகுரு |
| 6. தொழிற்நுட்ப பிரிவு | : | S. இராமநாதன், N.D.S. அலெக்சாண்டர், V. பாரதி, A. காதர் இப்ராஹிம் |

16. அரசியல் சார்பற்று புதிய தொழிற்சங்க அமைப்பை தமிழக அளவில் தொடங்கிட நடைபெற உள்ள WPF அறிமுகக் கூட்டத்தில் முழுமையாக பங்கெடுப்பது என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## விருப்ப மாறுதல் விண்ணப்பங்கள் குறித்த தெளிவுரை

**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் லிமிடெட்**
**நிர்வாகக்கிளை**

அனுப்புநர்
பொறிஞர் **இரா. கிருஷ்ணமூர்த்தி,** பி.இ.
தலைமைப் பொறியாளர்/ பணியமைப்பு,
144, அண்ணாசாலை
சென்னை-600 002.

பெறுநர்
தலைமைப் பொறியாளர் /
பகிர்மானம்
வேலூர் மண்டலம்/ காந்தி நகர்,
வேலூர்

**கடித எண். 009201/164/ஜி43/ஜி432/2020, நாள்: 21.02.2020**

ஐயா,

**பொருள் : நிர்வாகம் - அலுவலர்கள் / பணியாளர்கள் - விருப்ப மாறுதல் கோரும் விண்ணப்பத்தின் முன் நகல் பெறப்படுவது குறித்து - தெளிவுரை - கோருவது தொடர்பாக.**

பார்வை :
1. **(Rt) CMD/TANGEDCO Proceedings No. 5, (Administrative Branch) dated 28.06.2017.**
2. **This office Memo No. 104992/1176/G43/G431/2017-2, dated : 14.07.2017.**
3. **This office Memo No. 104992/1176/G43/G431/2017-3, dated : 03.01.2018**
4. **Memo No. 104992/1176/G43/G431/2017-4, dated : 30.06.2018**
5. **Memo No. 104992/1176/G43/G431/2017-5 dated : 29.12.2018**
6. **Memo No. 104992/1176/G43/G431/2019-2 dated : 29.06.2019**
7. **Memo No. 104992/1176/G43/G431/2020-1 dated : 27.12.2019**
8. தலைமைப் பொறியாளர்/பகிர்மானம்/வேலூர் மண்டலம் அவர்களின் கடித எண். 001046/நிர்.ஆ./ஆ.2/ 2020, நாள்: 03.02.2020

பார்வை (8)ல் குறிப்பிட்டுள்ள தலைமைப் பொறியாளர்/ பகிர்மானம்/ வேலூர் மண்டலம் அவர்களின் கடிதத்தில் விருப்ப மாறுதல் கோரும் விண்ணப்பத்தின் முன் நகல் பெறப்படுவது குறித்து கீழ்க்காணும் தகவலை தெரிவித்து தெளிவுரை வேண்டப்பட்டுள்ளது.

2) வேலூர் மண்டலத்திற்குட்பட்ட சில உதவி செயற்பொறியாளர்கள் வட்டத்திற்குள் விருப்ப மாறுதல் கோரும் விண்ணப்பம் (Online) வாயிலாக 20.01.2020 அன்று பதிவு செய்யப்பட்டு அதன் அச்சுநகல் (Hard Copy) அலுவலகத்தில் 21.01.2020 அன்று பெறப்பட்டுள்ளது என்றும் எனவே, அவ்விண்ணப்பம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளலாமா என்பது குறித்த தெளிவுரை வேண்டப்பட்டுள்ளது.

3) இதுகுறித்து தெரிவிக்கப்படுவது என்னவெனில், விருப்ப மாறுதல் குறித்த வழிமுறைகள் குறிப்பாணை எண். 104992/1176/ஜி43/ஜி431/2017, நாள்: 30.06.2018 முதற்கொண்டு இணையத்தளத்தில் பதிவு செய்வது பற்றி தெளிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அதில் ஜனவரி மாதத்தில் 1ம் தேதி முதல் 20ம் தேதி வரை குறிப்பிட்ட நேரத்திற்குள் இணையத்தளத்தில் பதிவு செய்யப்பட வேண்டும் என்றும், மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்கள் உரிய அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

4) ஆகவே, மேற்குறிப்பிட்ட உதவி செயற்பொறியாளர்கள் 20.01.2020க்குள் உரிய காலத்திற்குள் விருப்ப மாறுதல் கோரும் விண்ணப்பத்தை இணையத்தளத்தில் பதிவு செய்துள்ளதை உறுதி செய்து கொண்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களையும் வழங்கி உள்ளதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கலாம் என்ற விளக்கம் வழங்கப்படுகிறது.

(ஒப்பம்/ 21.02.2020)
**இரா. கிருஷ்ணமூர்த்தி**
தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு

## புதிய மின் இணைப்பிற்கான விண்ணப்பங்கள் (குடிசை மற்றும் விவசாயம் நீங்கலாக) இணையம் மூலம் விண்ணப்பிக்க வழிகாட்டும் உத்தரவு

**Tamilnadu Generation & Distribution Corporation Ltd.**
**Technical Branch**

144, Anna Salai,
Chennai - 600 002.

**Memo No: D(D)/CE/Coml/SE/EE1/AEE2/F. LT Onfiling/D.No. 40/ dt. 24.2.2020**

Sub : Electricity - Online application filling of New LT service connection of all categories (except Hut and Agriculture) throught web portal-Mandated - Regarding.

Ref : 1. (Per) (CMD) TANGEDCO Proceedings No. 362 Dated 04.08.2016

2. Memo. No. CE/Comml/SE/Comml/EET/AEE3/F Online Appln./ D.66/2016 dated 05.08.2016

3. Memo No: D(D)/CE/Comml/SE/EET/AEE.2/F. LT Online filling/ D.No. 159/19, dt. 25.06.2019

Online application filing system in respect of LT service connection (except hut and agriculture) has been in vogue since 05.08.2016.

The Department of Industrial Policy and Promotion (DIPP), Government of India has recommended to implement a system that allows online application submission, payment

and tracking of application status without the need for a physical touch point in obtaining new electricity connection. It also mandates that all applications are submitted online for obtaining new electricity service connection under Ease of Doing Business (EoDB).

Accordingly, the online application filing system for new LT Industrial service connection has been mandated from 01.07.2019. In order to ease the hassle of applying for new service connections to all other category LT new service connections (except Hut and Agriculture) the online application filing system shall be mandatory with effect from 1.3.2020.

In this process, the applicant has to upload the application and documents asper the provisions in the TNE Distribution and Supply Code and hard copies shall not be insisted from the applicant, except indemnity bond, Undertaking, NOC, agreement at the time of effecting Service Connection.

All the Chief Engineers/Distribution and Superintending Engineers/ EDCs are requested to instruct all concerned officials under their control up to the level of sections officers to receive the LT applications of all categories (except Hut and Agriculture) through online only and to adhere the instructions issued already in this regard.

The applicants who seek to apply in offline for their own reasons shall be convinced and guided properly for applying through online.

In this regard, the concerned Executive Engineer/General is nominated as Nodal officer to ensure that the LT applications of all categories (except Hut and Agriculture) have been applied through online only.

Wide publicity on the implementation of compulsory online application filing system may be given by displaying Banners / Boards at conspicuous pleaces of all offices viz. Section, Sub-Division, Division, Circle, Regional offices, Collection centers, etc so as to reach general public in large.

The above instructions shall be scrupulously followed without any deviation. If any new LT application (except Hut and Agriculture) is found to have been received in offline (in person) at later date, then the concerned officer will be held responsible and viewed very seriously.

Receipt of the memo shall be acknowledged to the Chief Engineer/Commercial without fail.

**(BY ORDER OF DIRECT (DISTRIBUTION)**

Sd/- 24.02.2020
Chief Engineer/Commercial(i/c)
For **DIRECTOR/DISTRIBUTION**



தேவிபாலா குணசேகரன்
வழக்கறிஞர்

## பகுதி - 7

# இந்திய தண்டனைச் சட்டம் (Indian Penal Code)

## அத்தியாயம் 8

### பொது அமைதிக்கு / பொது நீதிக்கு விரோதமான குற்றங்கள் பற்றி (கலகம் பொது இடச்சச்சரவு)

**பிரிவு - 141 (Section - 141)**

ஐந்து அல்லது அதற்கு மேற்பட்டவர்களைக் கொண்ட ஒரு கும்பலைச் சேர்ந்தவர்கள் இதன் கீழே விவரிக்கப்பட்டுள்ளவற்றில் ஏதேனும் ஒரு பொதுவான நோக்கத்தை நிறைவேற்றுவதற் காக ஒன்று சேர்வது சட்ட விரோதமான (UNLAWFUL ASSEMBLY) கும்பல் / கூட்டம் எனப்படும்.

மத்திய அல்லது மாநில அரசு அல்லது சட்டசபை அல்லது பொது ஊழியர் எவரையேனும் குற்றபலத்தின் மூலம் கட்டுப்படுத்தி விடுதல். சட்டம் அல்லது சட்டச் செயல்களை நிறை வேற்றுவதைத் தடுத்தல் அல்லது எதிர்த்தல். அழிப்பு, அத்துமீறி நுழைதல் அல்லது இதர வகையான குற்றச் செயல்களைச் செய்தல். தமது குற்றபலத்தைப் பயன்படுத்தி சொத்துக்களை எடுத்துக் கொள்தல், அனுபவ உரிமையைக் கைக்கொள்தல், நுண்ணியமான உரிமையை (வழிநடை உரிமை, நீர் பயன் படுத்தும் உரிமை) இழக்கச் செய்தல், அல்லது வேறு உரிமைகள் எதையேனும் குற்ற பலத்தின் மூலம் செயல்படுத்துவது.

குற்றபலத்தைப் பயன்படுத்தி ஒருவர் சட்டப்படி செய்யக் கூடாததைச் செய்வதற்கோ அல்லது சட்டப்படி செய்ய உரிமையுள்ள செயலைச் செய்யாமலிருப்பதற்கோ வற்புறுத்துதல் ஆகிய பொது நோக்கங்களுக்காக ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் கூடுவது சட்டவிரோதமான கும்பல் எனப்படும்.

இவைகளால் பொது அமைதி அல்லது பொது ஒழுங்கு மீறப்படும். முதலில் கூடும் போது சட்டப்படியாக இருந்த கூட்டமானது பின்பு சட்டவிரோதமான கூட்டமாக மாறலாம்.

**பிரிவு - 142 (Section - 142)**

எந்த ஒரு நபரும் விவரம் தெரிந்து சட்ட விரோதமான கூட்டத்தில் உறுப்பினராக இருந்தால், அக்கூட்டத்தின் செயலுக்கு அவரும் பொறுப்பாவார்.

**பிரிவு - 143 (Section - 143)**

**குற்றம் :** சட்டவிரோத கும்பலின் உறுப்பினராக இருத்தல்.

**தண்டனை :** 6 மாதங்கள் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்து தண்டனையாக விதிக்கப்படும்.

**மேலதிக விவரங்கள் :** கைது செய்யக் கூடியது. பிணையில் விடக்கூடியது.

எந்த நடுவர் (Any Magistrate) மன்றத்திலும் வழக்கிடலாம்.

**பிரிவு - 144 (Section - 144)**

**குற்றம் :** சட்ட விரோதமாக கும்பலாகக் கூடுதல், அந்தக் கூட்டத்தில் மரணம் அல்லது கொடுங்காயம் ஏற்டுத்தக்கூடிய பயங்கர ஆயுதங்களுடன் இருத்தல்.

**தண்டனை :** 2 ஆண்டுகள் சிறைவாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும்.

**மேலதிக விவரங்கள் :** கைது செய்யக் கூடியது, பிணையில் விடக்கூடியது.

எந்த நடுவர் (Any Magistrate) மன்றத்திலும் வழக்கிடலாம்.

**பிரிவு - 145 (Section - 145)**

**குற்றம் :** கலைந்து செல்ல உத்தரவிடப் பட்டுள்ள சட்ட விரோத கும்பல் என்பதை அறிந்தே அதில் உறுப்பினராகத் தொடர்ந்து நீடித்தல் அல்லது புதிதாக உறுப்பினராகத் தம்மை இணைத்துக் கொள்வது.

**தண்டனை :** 2 ஆண்டுகள் சிறைவைப்பு அல்லது அபராதம் அல்லது இரண்டுமே சேர்த்துத் தண்டனையாக வழங்கப்படும் குற்றமாகும்.

**மேலதிக விவரங்கள் :** கைது செய்யக் கூடியது, பிணையில் விடக்கூடியது.

எந்த நடுவர் (Any Magistrate) மன்றத்திலும் வழக்கிடலாம்.

**பிரிவு - 146 (Section - 146)**

சட்ட விரோதமான கூட்டத்தின் உறுப்பினர்கள் பலத்துடன் அத்து மீறி வன்முறையில் ஈடுபடுவது கலகம் ஆகும்.

சட்ட விரோதமான கூட்டம் + வன்முறை = கலகம்..!!

**பிரிவு - 147 (Section - 147)**

**குற்றம் :** கலகம் விளைவித்தல்.

**தண்டனை :** 2 ஆண்டுகள் சிறை தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும்.

**மேலதிக விவரங்கள் :** கைது செய்யக் கூடியது, பிணையில் விடக்கூடியது.

எந்த நடுவர் (Any Magistrate) மன்றத்திலும் வழக்கிடலாம்.

**பிரிவு - 148 (Section - 148)**

**குற்றம் :** மரணம் அல்லது கொடுங்காயம் விளைவிக்கக்கூடிய அபாயகரமான ஆயுதங்கள் தாங்கி கலகம் விளைவித்தல்.

**தண்டனை :** 3 ஆண்டுகள் சிறை தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்து தண்டிக் கப்படுவார்.

**மேலதிக விவரங்கள் :** கைது செய்யக் கூடியது, பிணையில் விடக்கூடியது.

முதல் வகுப்பு நடுவர் மன்றத்தில் வழக்கிடலாம்.

**பிரிவு - 149 (Section - 149)**

சட்ட விரோத கும்பலின் உறுப்பினரால் அந்தக் கும்பலின் நோக்கம் நிறைவேறும் வகையில் ஒரு குற்றம் செய்யப்படுமானால் அந்தக் கும்பலில் இருக்கும் அனைவரும் அக்குற்றத்தைச் செய்ததாகப் பொறுப்படைவர்.

**பிரிவு - 150 (Section - 150)**

சட்ட விரோத கும்பல் என்பதை அறிந்தே ஒருவர் அதற்கு ஆதரவாக இருத்தல், அந்த கும்பலுக்குக் கூலிக்கு ஆள் அமர்த்துதல், ஈடு படுத்துதல், அல்லது வேலைக்கு அமர்த்துதல் போன்றவற்றைச் செய்து கொடுத்தலைத் தொடர்ந்து அத்தகைய ஆட்களால் அந்தக் கும் பலுக்காகச் செய்யப்படும் எந்தக் குற்றத்திற்கும் அவரே அத்தகைய சட்ட விரோதமான செயலைச் செய்தாற் போன்ற தண்டனை களுக்கு உரியவராவார்.

**பிரிவு - 151 (Section - 151)**

**குற்றம் :** கலைந்து செல்லுமாறு உத்தரவிடப் பட்ட 5 அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களைக் கொண்ட பிரிவு 141ன் படியான சட்ட விரோதமான கும்பலில் அறிந்தே சேர்தல் அல்லது தொடர்ந்திருத்தல்.

**தண்டனை :** பிரிவு 145ன் படி இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்து தண்டனையாக வழங்கப்படத்தக்க குற்றமாகும்.

**மேலதிக விவரங்கள் :** கைது செய்யக் கூடியது, பிணையில் விடக்கூடியது.

எந்த நடுவர் (Any Magistrate) மன்றத்திலும் வழக்கிடலாம்.

**பிரிவு - 152 (Section - 152)**

**குற்றம் :** கலகம் முதலியவற்றை அடக்கும் பணியில் ஈடுபடும் பொது ஊழியர் ஒருவரைத் தடுத்தல் அல்லது அவரைத் தாக்குதல் போன்ற செயல்களைச் செய்வது.

**தண்டனை :** 3 ஆண்டுகள் சிறை தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும்.

**மேலதிக விவரங்கள் :** கைது செய்யக் கூடியது, பிணையில் விடக்கூடியது.

முதல் வகுப்பு நடுவர் நீதிமன்றத்தில் வழக்கிடலாம்.

**பிரிவு - 153 (Section - 153)**

**குற்றம் :** சட்டத்திற்கு மாறான எதையேனும் செய்வதன் மூலமோ கலகம் விளைவிக்க வேண்டு மென்ற உட்கருத்துடனோ அநேக மாகக் கலகம் விளையும் என்று தெரிந்தே குரோ தத்துடன் அல்லது வேண்டுமென்றே எவருக் கேனும் ஆத்திரமூட்டுகின்ற எவரொருவரும் -

**தண்டனை :** அத்தகைய கலகம் நடத்தப்பட்டு விட்டால் ஓராண்டு சிறை தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்து தண்டிக்கப்படுவார்.

**மேலதிக விவரங்கள் :** கைது செய்யக் கூடியது, பிணையில் விடக்கூடியது.

எந்த நடுவர் (Any Magistrate) மன்றத்திலும் வழக்கிடலாம்.

கலகம் நடைபெறாவிட்டால் 6 மாதங்கள் சிறை தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்து தண்டிக்கப்படுவார்.

முதல் வகுப்பு நடுவர் நீதிமன்றத்தில் வழக்கிடலாம்.

**பிரிவு - 153 A (Section - 153 A)**

**குற்றம் :** வகுப்புகளிடையே பகைமையை வளர்த்தல்.

**தண்டனை :** 3 ஆண்டுகள் சிறை அல்லது அபராதம் அல்லது இரண்டும். வழிபடும் இடங்களில் வகுப்புகளிடையே பகைமையை வளர்த்தல் முதலியன. 5 ஆண்டுகள் சிறை அல்லது அபராதம் அல்லது இரண்டும்.

**மேலதிக விவரங்கள் :** கைது செய்யக் கூடியது, பிணையில் விடக்கூடாதது. முதல் வகுப்பு நடுவர் நீதிமன்றத்தில் வழக்கிடலாம்.

**பிரிவு - 153 B (Section - 153B)**

**குற்றம் :** தேசிய ஒருமைப்பாட்டிற்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் பழி சொல்லுதல், வற்புறுத்திச் சொல்லுதல்.

**தண்டனை :** 3 ஆண்டுகள் சிறை அல்லது அபராதம் அல்லது இரண்டும். அதுவே பொது மக்கள் வழி படும் இடங்களில் செய்யப் பட்டால்... 5 ஆண்டுகள் சிறை அல்லது அபராதம் அல்லது இரண்டும்.

**மேலதிக விவரங்கள் :** கைது செய்யக் கூடியது, பிணையில் விடக்கூடாதது. முதல் வகுப்பு நடுவர் நீதிமன்றத்தில் வழக்கிடலாம்.

**பிரிவு - 154 (Section - 154)**

**குற்றம் :** யாரும் தம்முடைய இடத்தில் சட்ட விரோதமான கூட்டத்தையோ அல்லது கலகம் நடைபெறுவதையோ அனுமதிக்கக் கூடாது.

ஒருவருடைய இடத்தில் சட்ட விரோத மான கூட்டமோ அல்லது கலகமோ நடை பெறுவது தெரிய வந்தால் உடனடியாகக் காவல் துறைக்குத் தகவல் தெரிவித்து விட வேண் டும். அவ்வாறு தெரிவிக்காமல் விடுவதும், சட்டவிரோத கூட்டமோ அல்லது கலகமோ நடைபெற அனுமதிப்பதும் குற்றமாகும். அதற்கு ஆயிரம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும்.

இந்தக் குற்றத்தை இடத்தின் சொந்தக்காரர் நேரடியாகச் செய்யாமல், அவரது ஆட்கள் அல்லது பிரதிநிதி அல்லது மேலாளர் போன் றோர் செய்தாலும் அபராதம் விதிக்கப்படும்.

அந்தக் குற்றம் நடைபெறாமல் தடுக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளாமல் விடுவதும் குற்றமாகும்.

**தண்டனை :** 1000 ரூபாய் அபராதம்.

**மேலதிக விவரங்கள் :** கைது செய்யத் தேவை யில்லை. பிணையில் விடத்தக்கது. எந்த நடுவர் மன்றத்திலும் வழக்கிடலாம்.

**பிரிவு - 155 (Section - 155)**

**குற்றம் :** சட்டவிரோதமான கூட்டமோ அல்லது கலகமோ, ஒருவருடைய இடத்தில், அவருக்கு ஆதரவாக அவரின் உரிமைக்காக அவருக்குச் சாதகமாக அவரின் நன்மை அல்லது லாபம் கருதி நடைபெற்றாலும் கூட இடத்தின் உரிமையாளர் அதனைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு உரிமை யாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ அல்லது மேலாளரோ தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் விடுவதும் குற்றமாகும்.

**தண்டனை :** அபராதம்.

**மேலதிக விவரங்கள் :** கைது செய்யத் தேவை யில்லை. பிணையில் விடத்தக்கது. எந்த நடுவர் மன்றத்திலும் வழக்கிடலாம்.

**பிரிவு - 156 (Section - 156)**

**குற்றம் :** இடத்தின் உரிமையாளர் நலனுக் காகவே நடைபெற்றாலும் கூட சட்ட விரோத கும்பல் அல்லது கலகத்தை உரிமையாளரின் பிரதிநிதியோ அல்லது மேலாளரோ தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் விடுவதும் குற்றமாகும்.

**தண்டனை :** அபராதம்.

**மேலதிக விவரங்கள் :** கைது செய்யத் தேவை யில்லை. பிணையில் விடத்தக்கது. எந்த நடுவர் மன்றத்திலும் வழக்கிடலாம்.

**பிரிவு - 157 (Section - 157)**

**குற்றம் :** சட்ட விரோதமான கூட்டத்திற்குப் புகலிடம் அளிப்பது குற்றமாகும். ஆகவே, சட்ட விரோதமான கூட்டத்தைச் சேர்ந்தவர் களை அல்லது சட்ட விரோதமான கூட்டத் திற்காக அமர்த்தப்பட்டவர்களை அல்லது சட்ட விரோ தமான கூட்டத்திற்கென்று கூலிக்கு அழைக் கப்பட்டவர்களை மேலே கூறியபடி அவர்கள் சட்ட விரோதமான கூட்டத்தினர் என்று அறிந்தே, அவர்களை வரவேற்பதும், அவர்களைத் தம்மிடத்தில் ஒன்று கூட அனுமதிப்பதும், அவர்களுக்குப் புகலிடம் தருவதும் குற்றமாகும்.

**தண்டனை :** 6 மாதங்கள் சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டுமே தண்டனையாக விதிக்கப்படும்.

**மேலதிக விவரங்கள் :** கைது செய்யக் கூடியது. பிணையில் விடக்கூடியது.

எந்த நடுவர் (Any Magistrate) மன்றத்திலும் வழக்கிடலாம்.

**பிரிவு - 158 (Section - 158)**

**குற்றம் :** பிரிவு 141ல் குறிப்பிடப்பட்டுள்ள செய்கைகளில் எதையேனும் ஒன்றினைச் செயல்படுத்த அல்லது செய்வதற்கு ஈடுபடுத் தப்பட்டிருக்கிற, செய்யுமாறு ஈடுபடுத்தப் பட்டிருக்கிற அல்லது அச்செயலுக்கு உதவி செய்ய அமர்த்தப்பட்டிருக்கிற செய்வதற்காக கூலிக்கு அமர்த்தப்பட அல்லது அமர்த்தப்பட முயற்சிகள் செய்தாலும் அவை குற்றமாகும்.

**தண்டனை :** 6 மாதங்கள் சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டுமே தண்டனையாக விதிக்கப்படும். அப்படி அமர்த்தப்பட்ட நபர் ஒருவர் அபாயகரமான, மரணம் விளைவிக்கக் கூடிய ஆயுதங்களை ஏந்தி சட்ட விரோத கூட் டத்தில் செல்ல முன்வந்தால் அந்த நபருக்கு 2 ஆண்டு கள் சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டுமே தண்டனையாக விதிக்கப்படும்.

**மேலதிக விவரங்கள் :** கைது செய்யக் கூடியது. பிணையில் விடக்கூடியது.

எந்த நடுவர் (Any Magistrate) மன்றத்திலும் வழக்கிடலாம்.

**பிரிவு - 159 (Section - 159)**

பொது அமைதிக்குப் பங்கம் ஏற்படும் வகையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் ஒரு பொது இடத்தில் சண்டையிடு வதும், வசை பாடுவதும் குற்றமாகும்.

**பிரிவு - 160 (Section 160)**

**குற்றம் :** பிரிவு 159ல் குறிப்பிட்டுள்ளபடி சச்சரவு செய்தல்.

**தண்டனை :** ஒரு மாத கால அளவிற்குக் குறையாத சிறைக்காவல் அல்லது 100 ரூபாய்க்கு மேற்படாத அபராதம் அல்லது இரண்டுமே தண்டனையாக விதிக்கப்படலாம்.

**மேலதிக விவரங்கள் :** கைது செய்யக் கூடியது. பிணையில் விடக்கூடியது. எந்த நடுவர் (Any Magistrate) மன்றத்திலும் வழக்கிடலாம்.

**குறிப்பு :** பொது அமைதி மற்றும் ஒழுங்கு கருதி சட்ட விரோதமான கூடுதல் மற்றும் கலகத்தை யாரும் எந்த இடத்திலும் அனுமதிக்கக் கூடாது, அதன் மூலம் எந்த நன்மையையும் பெற முயற்சிக்கக் கூடாது என்பதே அத்தியாயம் 8ன் படியான இந்தப் பிரிவுகளின் நோக்கமாகும்.

***(தொடரும்)***

**Tamil Nadu Generation and Distribution Corporation Limited**
**(Abstract)**

RECRUITMENT - Class IV Service - Direct Recruitment of Field Assistant (Trainee) through Employment Exchange and open market - Certain changes in physical test to be conducted - Orders - Issued.

-----------------------------------------------------------------------------------------------------------

**(Administrative Branch)**

(Per) CMD TANGEDCO Proceedings No. 05, Dated : 10.03.2020
Maasi 27, Vigari Varudam,
Thiruvallurvar Aandu 2051

**Read :**

i) (Per.) (FB) TANGEDCO Proceedings No. 3 (Adm. Branch) Dated : 15.02.2018
ii) (Per.) (FB) TANGEDCO Proceedings No. 20 (Adm. Branch) Dated : 22.11.2018
iii) Extract from the minutes of the 92th Board meeting of TANGEDCO held on 26.02.2020 (Item No. 41)

*****

**Proceedings :**

In the Proceedings first read above, approval has been accorded for Direct Recruitment of 900 Field Assistant (Trainee) through Employment Exchange and Open Market.

2. Further as per the approval of Full Board of TANGEDCO, orders have been issued inm proceedings second read above, for direct recruitment of 2000 Field Assistant (Trainee) in addition to the already approved 900 posts vide Proceedings first read above. In the said proceedings among other things, for conduction of physical test orders have been issued as follows:-

"After physical test, the candidates who pass the Physical test (i.e., Pole Climbing and Ctcling) alone will be permitted to appear in the Competitive Written Examination and the candidates who does not pass the Physical test will not be permitted to appear in the COmpetitive Written Examination and further selection process."

3. Now, the Full Boad of TANGEDCO has approved to conduct the following physical test instead of already approved "Pole Climbing and Cycling".

i) The Physical Test shall contain 3 activities as detailed below:-

**a) Activitty - I**

POLE CLIMBING AND CROSS ARM FIXING - The candidate has to properly wear the belt rope, have to climb the 9 meters PSC pole (ie., 30 feet pole) and have to carry along with him one end of rope in which the other end will be kept tied with 3 - phasr cross arm. The

candidates has to fix the wooden support for foot rest, have to tie the belt rope with the pole for safety purpose and have to fix the 3 - Phase Cross Arm at the top of the pole securely and he should have to safely climb down. The above process should be completed within 8 minutes in one chance.

**b) Activity - II**

Plaiting of rope with AAAC 7/3.15 mm conductor, marking and fixing the conductor on creeper, binding and fixing in the HT Disc and inserting the M.Pin. The above process should be completed within 2 minutes in one chance.

**C) Activity - III**

The candidate has to successfully Lift and Carry 3 Nos. of $3^1/_2$ feet V-Cross Arm (around 35 kg) for a distance of 100 meters in one minute in one chance without putting the weight down.

**(BY ORDER OF THE CHAIRMAN CUM MANAGING DIRECTOR)**

**J. KALAISELVI**
Chief Engineer/Personnel

---

## மேட்டூர் அனல் மின்நிலையங்கள் மேட்டூர் மின்வட்டம், மேட்டூர் பணிமனை மற்றும் சிறப்பு பராமரிப்புப் பிரிவு ஆகியவைகளுக்கு அலுவலக நேரம் மாற்றம் குறித்த வாரிய ஆணை

**Tamil Nadu Generation and Distribution Corporation Limited**
**(Abstract)**

TANGEDCO - Office Hours - Change of Office hours at Special Maintenance & Central Sotores in Mettur EDC, Mettur Work Shop Circle Office, Central Stores of Mettur Work Shop Circle, Administration and Accounts Wing in Central Office at Mettur Thermal Power Station - I & II - Approved - Orders - Issued.

---

**(Secretariat Branch)**

**(Per) FB TANGEDCO Proceedings No. 3 (SB), dated : 10.03.2020**

Vigari Varudam
Maasi-27
Thiruvalluvar Aandu 2051

**Proceedings :**

The representations of certain unions to modify the working hours of Special Maintenance & Central Stores in Mettur EDC, Mettur Work Shop Circle Office, Central Stores of Mettur Work Shop Circle, Administration and Accounts Wing in Central Office at Mettur Thermal Power Station I & II have been examined. After careful consideration it has been decided to modify the present working hours of the above offices. Accordingly, TANGEDCO hereby directs to modify the present working hours of the above offices as detailed below:-

| Present Working hours | Modification of working hours |
|---|---|
| **Special Maintenance and Central Stores in Mettur EDC, Mettur Work Shop Circle Office and Central Stores of Mettur Work Shop Circle.** | Special Maintenance and Central Stores in Mettur EDC, Mettur Work Shop Circle Office and Central Stores of Mettur Work Shop Circle. |
| 7.00 A.M. to 4.30 P.M. (12.00 to 01.30 Lunch break) In all Saturday working hours 7.00 A.M. to 01.00 P.M. | 8.00 A.M. to 05.15 P.M. (12.00 to 01.00) Lunch Break second and fourth Saturday holiday. |
| **Administrative and Accounts Wing in Central Office at Mettur Thermal Power Station I & II** | **Administrative and Accounts Wing in Central Office at Mettur Thermal Power Station I & II** |
| 9.00 A.M. to 05.15 P.M. (12.00 to 02.00 Lunch break) Second and fourth Saturday holiday | 10.30 A.M. to 05.15 P.M. (01.30 to 02.00) Lunch Break Second and fourth Saturday holiday. |

2. The above time change shall come into force with effect from 16.03.2020.

3. Receipt of the Proceedings shall be acknowledged.

**(BY ORDER OF THE BOARD)**

**S. VINEETH,**
Secretary (FAC)

## தமிழ்நாடு அனைத்து மின் பணியாளர்கள் முன்னேற்ற சங்க பொதுச்செயலாளர் திரு. நாகலிங்கம் மற்றும் நிர்வாகிகள் எம்ப்ளாயீஸ் பெடரேஷன் அலுவலகத்தில் சந்திப்பு



11.03.2020 மாலை 4.00 மணிக்கு தமிழ்நாடு எலக்டிரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் தலைமை அலுவலகத்திற்கு தமிழ்நாடு அனைத்து மின்பணியாளர் முன்னேற்ற சங்க பொதுச்செயலாளர் திரு. M. நாகலிங்கம் மற்றும் நிர்வாகிகள் TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் பொதுச்செயலாளரை சந்தித்து கலந்துரையாடினார்கள்.

சந்திப்பின்போது எம்ப்ளாயீஸ் பெடரேஷன் தலைவர் தோழர் S. மணிகண்டன், பொருளாளர் J.L. பாஸ்டின்ராஜ், மாநில செயலாளர் திரு. லெனின் சீனிவாசன் ஆகியோர் பங்கேற்றனர்.

மின்பணியாளர்கள் முன்னேற்ற சங்க செயல்பாடுகள் குறித்து பேசி மே தின விழாவில் கலந்திட அழைப்பு விடுத்து சென்றார்கள்.

## நேரடி நியமனத்தில் உச்சபட்ச வயது வரம்பு குறித்த விதிமுறைகள் குறித்த உத்தரவு

**(ABSTRACT)**

Establishment - Class II & III services - Direct Recruitment to the posts of Assessor and Assistant Engineer/Electrical. Civil & Mechanical - Fixing upper age limit of appointment to the posts of Assessors and Assistant Engineers - Amendment to Tamil Nadu Electricity Board Service Regulations - Issued.

---

**(Secretariat Branch)**

(Per) FB TANGEDCO Proceedings No. 2, Dated the 15th February, 2020
Maasi-3, Vikaari Aandu,
Thiruvalluvar Aandu - 2051.

**Read :**

1. (Per) FB TANGEDCO Proceedings No. 31 (SB), dated : 07.08.2019
2. (Per) FB TANGEDCO Proceedings No. 2 (Adm. Br), dt : 07.01.2020

******

**Proceedings:**

In furtherance of the orders issued in the Proceedings read above and in exercise of the powers conferred by Section 79(c) of the Electricity (Supply) Act, 1948 (Central Act 54 of 1948), read with Section 185 of the Electricity (Supply) Act, 2003 and G.O.Ms. No. 100, Energy (B2) Department, dated 19.10.2010, the Tamil Nadu Generation and Distribution Corporation Limited (formerly Tamil Nadu Electricity Board) makes the following amendment to the Tamil Nadu Electricity Board Service Regulations:-

**Amendment**

In the said Regulations, after sub-clause (ii) under clause (d) under sub-regulation (2) in regulation 91 the following Proviso shall be added:

"Provided that the relaxation on upper age limit as specified in sub-clauses (i) and (ii) above, shall not be applicable for selection and appointment to the following posts by Direct Recruitment:

(1) Assessor;
(2) Assistant Engineer/Electrical, Civil and Mechanical".

2. The receipt of these proceedings shall be acknowledged.

**(BY ORDER OF THE BOARD)**

**S. VINEETH,**
Secretary
(Full Additional Charge)

# 2018ல் கணக்கீட்டு ஆய்வாளர் பதவி வழங்குவதில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தவர்களுக்கு பதவி உயர்வு வழங்கிய உத்தரவு

From
Er. R. Krishnamoorthy, B.E.,
Chief Engineer/Personnel (A/c),
8th Floor, N.P.K.R.R. Maaligai,
144, Anna Salai,
Chennai - 600 002.

To
The Superintending Engineers/
Coimbatore EDC/Metro,
Madurai EDC,
Chennai EDC/ South-I,
Tirupathur EDC,
Karur EDC.

**Letter No. 000003/01/G.25/G.251/2018, dated : 29.02.2020**

Sir,

Sub : Establishment - Class III Service - Assessor - Selected for promotion as Inspector of Assessment - Allotted orders - Issued.

Ref :
1. This office Memo No. 011978/29/G25/G252/2018-10, Dated : 31.12.2018
2. This office Lr. No. 011978/29/G25/G252/2018-11, Dated : 31.12.2018
3. This office Lr. No. 011978/29/G25/G252/2018-15 Dated : 29.02.2020.

******

I am to state that the Assessors mentioned in the Annexure who have been selected and included in the panel for promotion to the post of Inspector of Assessment on regular basis in the Memo cited are allotted to your circle against the existing vacancy.

2) I am to inform that with reference to note (1) in Annexure-II referred to in Regulation 93 of Tamil Nadu Electricity Board Service Regulations, orders of appointment and posting as Inspector of Assessment may be issued to the promotes related to your circle in the Annexure-A of the panel under intimation to this Branch. Before issue of appointment orders, it may be passed the II class Language Test in Tamil as per T.N.E.B.S.R. 91 (3).

3) It is certified that the above Assessors Possess the requisity qualification to hold the post of Inspector of Assessment on promotion and report their date of joining duty promptly.

4) I am also requesting you to incorporate the following clause in the appointment and posting orders of the above promote.

(i) If they do not join duty within the stipulated time, their promotion is liable for cancellation and the next junior will be promoted and posted.

5) I also request you to issue reposting orders within seven daysa from the date of receipt of this orders as per instructions issued in Memo. No. 100588/515/G42/G42/2002-1, date : 30.08.2002. The promote shall be relived on receipt on reposting orders.

6) I am to inform that in promotion orders of Assessors to Inspector of Assessment, it shoule be informed that the promotive Inspector of Assessment should attend the works of Assessors till the post of Assessor are filled up as instructed in this office vide (per) B.P.No. 68, (Sectt. Branch), dated : 25.11.2002.

Encl: Annexure

Yours faithfully,
(Sd./*** 29.02.2020)
**A. Chandra Sekar**
Assistant Personnel Officer/C.S.
for Chief Engineer/Personnel

---

## ANNEXURE

**Letter No. 000003/01/G. 25/G. 251/2018,Dated : 29.02.2020**

**List of Selected Assessors for Promotion to the post of Inspector of Assessment**

| Sl. No. | Sy. No. | Name and D.O.B. (Thiruvalargal) | Present Circle | Circle allotted |
|---|---|---|---|---|
| 1. | 980 (a) | Tmty. R. Nithya, D.O.B. 04.01.1989 | Coimbatore EDC/Metro | Coimbatore EDC/Metro |
| 2. | 1017(a) | R. Karthigaipandian D.O.B. 13.07.1983 | Madurai EDC | Madurai EDC |
| 3. | 1652 | K. Sudhakar, D.O.B. 30.05.1975 | Chennai EDC/ South-I | Chennai EDC/ South-I |
| 4. | 1768 | K. Sundar, D.O.B. 30.07.1973 | Tirupathur EDC | Tirupathur EDC |
| 5. | **1922(a)** | **V. Thangaraj, D.O.B. 02.06.1973** | **Madurai EDC** | **Madurai EDC** |
| 6. | 2039(A) | R. Muniyappan, D.O.B. 11.05.1977 | Karur EDC | Karur EDC |

Sd./*** 29.02.2020
Assistant

Personnel Officer/C.S.

**Tamil Nadu Generation and Distribution Corporation Limited**

Secretariat Branh
144, Anna Salai, Chennai - 2

**Memorandum No. 68638/A18/A181/2019-1, dated : the 4th February, 2020**

Sub : Establishment - Eudcational Qualification - Entry of candidates with bogus educational qualification and other certificates - Verification of its genuineness - Certain additional Instructions - Issued.

Ref : 1) Memo. (Per) No. 18630/A18/A181/2019-1 (SB), dated : 04.04.2019
2) Memo. (Per) No. 48608/A18/A181/2019-1 (SB), dated : 28.11.2019

*****

In the Memo. first cited, instructions have been issued to all the Appointing Authorities to complete the process ofverification of genuiness of the educational qualification certificates in respect of the left out cases and to affix a copy of the same in Service Registers of employees, on or before 31.05.2019. Reiterating the said instructions, all the Chief Engineers/Superintending Engineers were requested to ensure that genuineness of all the educational certificates of the officers/employees working under their control is verified and a copy of the same affixed in the Service Registers of the concerned officers/employees, on or before 15.02.2020 - vide Memo. second cited.

2. It has been brought to the notice that apart from the academic qualifications, the genuineness of certificates pertaining to other pre-requisite qualifications for appointment to the initial level cadre, is not verified by the Appointing Authorities.

3. Therefore, all the Appointing Authorities are hereby instructed to ensure that apart from verifying the genuineness of the academic qualifications of all the officials as per the instructions issued earlier, the genuineness of certificates pertaining to other pre-requisite qualifications is also verified.

4. Further, in respect of future recruitments, the Appointing Authorities are instructed to complete the process of verification of all the relevant certificates before declaration of probation of the employees. If the said process gets delayed for valid reasons, the probation of the officials/ employees should be extended till the verification process is over.

5. Any violation of the above instructions will be viewed seriously.

6. The receipt of this Memorandum shall be acknowledged.

**(BY ORDER OF THE CHAIRMAN-CUM-MANAGING DIRECTOR)**

**S. VINEETH**
Secretary (Full Additional Charge)

**50 வருடங்கள் தொழிற்சங்கப் பணியை நிறைவு செய்து தொடர்ந்நது தொழிற்சங்கப் பணியை செய்து வரும் மூத்த தலைவர்களுக்கு பொன்விழா ஆண்டு விருது வழங்கிய கௌரவித்த காட்சிகள்**



**S. இராமநாதன்,** அமைப்பு செயலாளர்



**K. செல்வராஜ்,** செயல் தலைவர்



**R. சக்திவேல்,** உபதலைவர்



**C. இராமதாஸ்,** உபதலைவர்



**S. இராஜாங்கம்,** மாநில செயலாளர்



**K.R.S. சுப்ரமணியம்,** மாநில உபதலைவர்



**N. முத்தையா,** உபதலைவர்



**K. சிவசுப்பு பாண்டியன்,** உபதலைவர்



**A. அழகு,** திருநெல்வேலி மின்வட்டம்



**C. பழனியப்பன்,** கோபி மின்வட்ட தலைவர்

# BSNLல் தொடர் முழக்கப் போராட்டம்




அண்ணாசாலை பிஎஸ்என்எல் தொலைபேசி நிலைய வளாகத்தில் 24.02.2020 அன்று தேசிய தொலைத் தொடர்பு ஊழியர் சம்மேளனம், தொழிலாளர் கல்வி மையம் மற்றும் தேசிய தொலைத் தொடர்பு ஒப்பந்த தொழிலாளர்களின் சம்மேளனம் ஆகியவை ஒன்றிணைந்து நடத்திய தொடர் முழக்கப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் T.K.S. இளங்கோவன், தமிழ்நாடு மின்சார வாரிய எம்ப்ளாயீஸ் பெடரேஷன் பொதுச்செயலாளர் A. சேக்கிழார், நெய்வேலி சுரங்க ஒப்பந்த தொழிலாளர்கள் சங்கத்தின் தலைவர் M. சேகர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து ஊழியர் சம்மேளனத்தின் தலைவர் அசோகன் உள்ளிட்டோர் பங்கேற்று உரை நிகழ்த்தினர். மாநிலத் தலைவர்கள் பாபநாசம், ராமசாமி, பாபு ஆகிய மூவரின் கூட்டுத் தலைமையில் நடைபெற்ற இந்த போராட்டத்தின் கோரிக்கைகளை விளக்கி மாநிலச் செயலாளர் எஸ். ஆனந்தன் பேசினார். பிஎஸ்என்எல் நிறுவனத்தில் பணிபுரியும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு பத்து மாதங்களாக வழங்கப்படாதிருக்கும் ஊதியத்தை உடனடியாக வழங்கக் கோரியும், ஏராளமான ஊழியர்களை விருப்ப ஓய்வில் வெளியேறிவிட்டதால் பிஎஸ்என்எல் நிறுவனத்தின் சேவையை வழங்கிட கடும் ஊழியர் பற்றாக்குறையை சமாளிக்க மாற்று ஏற்பாடுகளை நிர்வாகம் செய்யக் கோரியும், விருப்ப ஓய்வில் சென்ற ஊழியர்களுக்கு அரசும் நிர்வாகமும் உறுதியளித்த அனைத்து அம்சங்களையும் உடனடியாக வழங்கிடக் கோரியும் நடைபெற்ற இந்த போராட்டத்தில் அகில இந்திய உதவித் தலைவர் சி.கே. மதிவாணன் நிறைவுறையாற்றி முடித்து வைத்தார்.





**பத்திரிகை செய்தி**

## 50 சதவீதத்துக்கும் மேற்பட்ட ஊழியர்களின் விருப்ப ஓய்வால் தடுமாறும் பிஎஸ்என்எல் நிறுவனம்

நன்றி : **தினமணி 02.03.2020**

**மீ**ளமுடியாத பொருளாதார சிக்கலில் மாட்டிக் கொண்டு பிஎஸ்என்எல் தவித்தது. இந்த இக்கட்டான சூழலில் இருந்து மீள ஊழியர்களுக்கு விருப்ப ஓய்வு (விஆர்எஸ்) திட்டம் அறிவிக்கப் பட்டது. மேலும், 4ஜி சேவையை விரைந்து அளிப்பதோடு, நிறுவனத்தை மேம்படுத்த நிதி அளிக்கப் படும் எனவும் மத்திய அரசு அறிவித்தது.

**78,589 பேர் விருப்பு ஓய்வு:** இதையடுத்து நாடு முழுவதும் கட்டாய விருப்ப ஓய்வு பெறும் திட்டத்தின் மூலம் பிஎஸ்என்எல் நிறுவனத்தின் 78 ஆயிரத்து 569 பணியாளர்கள் ஜனவரி 31-ஆம் தேதி ஓய்வு பெற்றனர். தமிழகத்தில் மட்டும் 7,879 பேர் விருப்ப ஓய்வு பெற்றனர். இது அந்த நிறுவனத்தில் பணியாற்றிய ஒட்டு மொத்த பணியாளர்களில் 50 சதவீதத்துக்கும் அதிகமாகும்.

விருப்ப ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு மாற்றாக போதிய தற்காலிக பணியாளர்கள் நியமிக்கப்படவில்லை. இதனால் வாடிக்கையாளர் சேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் நிறுவனம் திணறும் நிலை ஏற்பட்டுள்ளது. வழக்கமாக ஓரிரு நாள்களில் நிவர்த்தி செய்யப்படும் பழுது உள்ளிட்ட வாடிக்கையாளர்களின் அவசரத் தேவைகளை பூர்த்தி செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது. இதனால் நீண்ட கால வாடிக்கையாளர்களை இழக்கும் நிலைக்கும் பிஎஸ்என்எல் நிர்வாகம் தள்ளப்பட்டுள்ளது.

**வாடிக்கையாளர் சேவை மையங்கள்:** பிஎஸ்என்எல் வாடிக்கையாளர் சேவை மையங்களிலும் போதிய பணியாளர்கள் இல்லை. இதுதவிர, பிஎஸ்என்எல் தரைவழி தொலைபேசி, செல்லிடப் பேசி இணைப்புகள், அகன்ற அலைவரிசை இணைப்புகளில் ஏற்படும் பழுதுகள், பிரச்னைகளுக்கு தீர்வு காண ஆள்கள் போதுமான ஆள்கள் இல்லாத சூழல் ஏற்பட்டுள்ளது.

இதனால் வழக்கமாக 450 இணைப்புகளுக்கு பழுது பார்க்கும் ஒரு பணியாளர் தற்போது 4,500 இணைப்புகளின் பழுதை பார்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. பராமரிப்புப் பணியிலும் ஊழியர்கள் பற்றாக்குறையால் அதில் தொய்வு ஏற்பட்டுள்ளது.

பிஎஸ்என்எல் கோபுரங்களை பழுது பார்க்கவும், பராமரிக்கவும் கூட போதுமான ஊழியர்கள் இல்லை. ஒட்டுமொத்தமாக, அனைத்துப் பிரிவுகளிலும் பணியாளர்கள் பற்றாக்குறையால் பிஎஸ்என்எல் ஜுநிர்வாகம் திணறத் தொடங்கியுள்ளது. 60 வயதை எட்டிய 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள், அதிகாரிகள் தற்போது ஓய்வு பெறவுள்ள சூழலில் நிறுவனத்துக்கு மேலும் சுமை அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளத.

பிஎஸ்என்எல் நிறுவனத்தின் மேம்பாட்டுக்காக கடந்த ஆண்டு அக்டோபர் 23-ஆம் தேதி மத்திய அரசு, 4 ஜி சேவையை அளிப்பது, நிதி அளிப்பது, விருப்ப ஓய்வு ஆகியவற்றை அறிவித்தது. ஆனால், பணியாளர்கள் குறைப்பு விஷயத்தில் மட்டும் முனைப்பு காட்டப் பட்டதாகவும், பிற அறிவிப்புகள் நிலுவையில் இருப்பதாகவும் ஊழியர்கள் தரப்பில் குறை கூறுகின்றனர்.

**மாற்று ஏற்பாடு தேவை:** இதுகுறித்து தேசிய தொலைத் தொடர்பு ஊழியர்கள் சம்மேளனத்தின் (பிஎஸ்என்எல்) உதவி தலைவர் சி.கே. மதிவாணன் கூறியது நாடு முழுவதும் ஒரு லட்சத்து

53 ஆயிரம் பிஎஸ்என்எல் ஊழியர்கள் பணியாற்றி வந்தனர். இவர்களில், 78,569 பேர் விருப்ப ஓய்வில் சென்றுவிட்டனர். இவர்கள் சென்ற பிறகு, மாற்று ஏற்பாடு இதுவரை செய்யவில்லை. இதனால் வாடிக்கையாளர்களுக்கு போதுமான சேவை அளிக்க முடியாத இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக பராமரிப்பு பழுது பார்க்கும் பணிகளில் மிகப் பெரிய தொய்வு ஏற்பட்டுள்ளது.

சென்னையில் உள்ள பல வாடிக்கையாளர்கள் சேவை மையங்கள் ஒப்பந்த அடிப்படையில் விடப்படவுள்ளன. பிஎஸ்என்எல் கோபுரங்கள் பெரும்பாலும் வாடகை கட்டடங்களில் இயங்குகின்றன. அவற்றின் உரிமையாளர்களுக்கு வாடகை செலுத்தாததால் பழுது நீக்கச் செல்லும் பணியாளர்களை அவர்கள் கட்டடத்துக்குள் அனுமதிப்பது இல்லை. 50 கோபுரங்களை பராமரித்த ஒருவர் தற்போது 150 கோபுரங்களை பராமரிக்க வேண்டிய நிலை உள்ளது. அனைத்து மட்டத்திலும் தற்போது பணிபுரியும் ஊழியர்களுக்கு வேலைப்பளு அதிகரித்துள்ளது. சேவை குறைபாடுகளை உடனடியாக நீக்க முடியவில்லை.

## கண்களை விற்று சித்திரம் வரைவானேன்!

பிஎஸ்என்எல் நிறுவனத்தின் இயக்குநர் (மனித வளம்) அரவிந்த் வத்னேர்கர் மார்ச் 06 அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் விருப்ப ஓய்வு திட்டத்தில் 78500 பேருக்கு மேல் வெளியேறி விட்டதால் ஐம்பது சதவிகித இடங்களை / கட்டிடங்களை காலி செய்ய உத்தரவிட்டுள்ளார். இப்படி காலியாகும் இடத்தை வாடகைக்கு விட்டு நிதி திரட்ட நடப்பு நிதியாண்டில் அவர் திட்ட மிட்டுள்ளார். முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் செயல்படும் பிஎஸ்என்எல் அலுவலகங்களை காலி செய்துவிட்டு ஒதுக்குப்புறமான இடங் களுக்கு மாற அவர் யோசனை சொல்வது கண் களை விற்று சித்திரம் வரையும் கதையாகியுள்ளது.

பொதுத்துறை நிறுவனங்களை பாது காப்பார்கள் என நம்பி வாக்களித்த மக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் நல்ல பரிசு தருகிறார்கள். இதுவே தொடர் கதையானால் தொழிலும், தொழிலாளர்களும் கேள்விக்குறியாவார்கள் என்பது நிதர்சனமான உண்மை.

புத்தாக்கம் திட்டம் இதுதானா? இந்திய நாட்டின் தொலை தொடர்புத்துறை தொடர்புக்கு அப்பால் செல்கிறதா??

D.O.No. 3/02/BSNL/CO (BW)
Dated 6th March, 2020

**ARVIND VADNERKAR**
Director (HR)
BSNL Board

Dear all,

We have fixed a target of earning at least Rs. 1000 Cr. by way of leasing out out buildings and office premises in the year 2020-21.

After successful completion of VRS, about 78500 employees have already left us leaving lot of vacant office spaces. You are requested to reorganize office spaces in such a way that at least 50% of office buildings are vacated and offered for renting out. Our offices can be shifted from commercial areas to not so commercial areas.

All out efforts are required from your side. A report detailing all available space will be issued by CGM (BW) who will be in-charge and driving force behind the project.

With regards,

Yours sincerely

6.3.2020

**(Arvind Vadnerkar)**

பத்திரிகை செய்தி

# மூன்றாவது குழந்தைக்கான மகப்பேறு விடுமுறைக்கு ஊதியத்தை கோர முடியாது

## உயர்நீதிமன்றம்

**சென்னை, மார்ச் 3:** முதல் பிரசவத்தில் இரண்டு குழந்தைகளைப் பெற்ற மத்திய அரசு பெண் ஊழியர் 3-ஆவது குழந்தையைப் பெற்றெடுக்கும் பொருட்டு மகப்பேறு விடுமுறைக்கான ஊதியத்தைக் கோர முடியாது என உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் மத்திய தொழில் பாதுகாப்புப் படையில் பணிபுரியும் ஆயிஷா பேகம் தாக்கல் செய்த மனுவில், முதல் பிரசவத்தில் எனக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. இதற்கான 6 மாத கால மகப்பேறு விடுமுறையும், ஊதியத்தையும் பெற்றேன். இதனையடுத்து இரண்டாவது முறையாக பிரசவித்து 3-ஆவது குழந்தையைப் பெற்றெடுக்க 6 மாத காலம் மகப்பேறு விடுப்பு எடுத்தேன். இதற்கான ஊதியத்தை வழங்க மத்திய தொழில் பாதுகாப்பு படை மறுத்துவிட்டது. எனவே, இரண்டாவது பிரசவத்துக்கான மகப்பேறு கால விடுமுறைக்கான ஊதியத்தை வழங்க உத்தரவிட வேண்டும் என கோரியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி, இரண்டாவது பிரசவத்துக்கான பேறுகால விடுமுறையும், அதற்கான ஊதியத்தையும் வழங்க வேண்டும் என உத்தரவிட்டார். இந்த உத்தரவை எதிர்த்து மத்திய அரசு, மத்திய தொழில் பாதுகாப்புப்படை இயக்குநர் மற்றும் மத்திய தொழில்பாதுகாப்பு படை ஐ.ஜி., சார்பில் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு தலைமை நீதிபதி ஏ.பி. சாஹி, சுப்பிரமணியம் பிரசாத் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் அண்மையில் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில், இந்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி, தமிழக அரசின் பேறுகால விடுமுறை விதிகளை விளக்கி அதன் அடிப்படையிலேயே இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். ஆனால், மனுதாரர் மத்திய தொழில் பாதுகாப்புப் படையில் பணிபுரிவதால், இவருக்கு ம்திய சிவில் சர்வீஸ் (விடுமுறை) விதிகள் மட்டுமே பொருந்தும். அந்த விதிகளின்படி 2 குழந்தைகளுக்கு மட்டுமே 180 நாள்கள் விடுமுறையும், அதற்கான விடுமுறையும் வழங்க முடியும். இந்தத் திட்டம் 2 குழந்தைகளுக்கு மேல் வேண்டாம் என்பதற்காகத்தான் கொண்டு வரப்பட்டது. மனுதாரருக்கு முதல் பிரசவத்திலேயே 2 குழந்தைகள் பிறந்துவிட்டன. எனவே, இரண்டாவது பிரசவத்துக்கு ஊதியத்துடன் விடுமுறை கோர முடியாது. எனவே, இந்த வழக்கில் தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. மேலும் இதுபோன்ற அபூர்வமான வழக்குகுளில் விதிகளைத் தளர்த்துவது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முடிவு செய்யலாம். எனவே, இந்த விவகாரம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய முடிவை எடுக்க வேண்டும் என உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தனர்.

நன்றி :
**தினமணி**
**2020' மார்ச் 4**

# உழைக்கும் மக்கள் கூட்டமைப்பு
# (WORKING PEOPLE FORUM)

**தமிழ்நாடு**




28.02.2020 அன்று சென்னையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் ஒன்று கூடி மாநிலம் தழுவிய அளவில் கட்சி சார்பற்ற ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்த முடிவெடுத்தன. மின்சார வாரியம், தொலைத் தொடர்பு, அரசுப் பணியாளர், அரசுப் போக்குவரத்து, குடிநீர் வடிகால் வாரியம், டாஸ்மாக், NLC ஒப்பந்த தொழிலாளர்கள் சங்கம் உள்ளிட்டோர் பங்கேற்ற இந்த ஆலோசனை கூட்டத்தில்

- ★ ஜனநாயகம் காப்பது
- ★ மதநல்லிணக்கம் காப்பது
- ★ பொதுத்துறை பாதுகாப்பு உள்ளிட்ட உயரிய நோக்கங்களுக்காக அமையும் WPF கூட்டமைப்பு பாடுபடும் என தீர்மானிக்கப்பட்டது.

மூத்த தொழிற்சங்க தலைவர்கள் கு. பாலசுப்பிரமணியம், விருதை காந்தி, சி.கே. மதிவாணன், என். மணி, எம். சேகர், ஏ. சேக்கிழார் உள்ளிட்டோர் பங்கேற்ற இந்த கூட்டத்தில் ''உழைக்கும் மக்கள் கூட்டமைப்பு'' ஒருங்கிணைப்பாளராக நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் ஒப்பந்த தொழிலாளர்கள் சங்கத்தின் தலைவர் சேகர் தேர்வானார்.

2020 மார்ச் 29 (ஞாயிறு) திருச்சியில் இக்கூட்டமைப்பில் இடம் பெற்றுள்ள அனைத்து சங்கங்களிலிருந்து பிரதிநிதிகள் பங்கேற்கும் விரிவடைந்த ஆலோசனை கூட்டத்தை நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.



# கரோனா வைரஸ்:

## சில சந்தேகங்களும் விளக்கங்களும்...

**டாக்டர். மகேசுவரன்**
சுப மருத்துவமனை, மேட்டுப்பாளையம்

நன்றி : **தினமணி 2020 மார்ச் 8**



**க**ரோனா வைரஸ் இன்று உலகம் முழுவதும் பீதி கிளப்பி வருகிறது. அது பற்றிய சந்தேகங்களுக்கான விளக்கங்கள்...

★ **கரோனா வைரஸ் என்பது என்ன?**

ரைனோ எனும் வைரஸுக்கு அடுத்தபடியாக சளியை ஏற்படுத்துவது கரோனா வைரஸ் இதில் ஏழு வகைகள் உள்ளன. அவற்றில் நான்கு வகை வைரஸ்கள் சாதாரண சளி, காய்ச்சலை உண்டாக்கும். ஆனால், உயிர்ச் சேதம், கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய கரோனா வைரஸ் மூன்று வகைகள் உள்ளன. அவை SARS (Sovere Acute Rospiratory Syndrome), MERS (Middle East Respiratory Syndrome). தற்போது சீனாவில் தோன்றியுள்ள Covid 19 ஆகிய வைரஸ்கள் ஆகும்.

★ **கொவைட் 19 எதிலிருந்து பரவியுள்ளது?**

இதற்கு முன்னர் கடும் பாதிப்பு ஏற்படுத்திய இரண்டு கரோனா வைரஸ்களான SARS, MERS ஆகியவையும் தற்போதைய கோவைட். 19ம் மிருகங்களிலிருந்து மனிதனுக்கு பரவியவையே SARS மரநாயிலிருந்தும். MERS ஒட்டகத்திலிருந்தும், கொவைட் 19 பழந்தின்னி வெளவால் களிடம் இருந்தும் பரவியுள்ளது.

பாம்பிலிருந்து தற்போதைய வைரஸ் பரவியதாக பலர் கூறினாலும் இவ்வைரஸ்களில் பழந்தின்னி வெளவால்களின் மரபணுக்கள் இருப்பதால் இது வெளவால்களில் இருந்துதான் பரவி இருக்க வேண்டும். இப்படி விலங்குகிளலிருந்து பரவும் தொற்றுகள் ஜூனோடிக் நோய்கள் என்று அழைக்கப்படுகிறது.

உலகில் நான்கு நிமிடத்திற்கு ஒரு முறை மிருங்களிலிருந்து மனிதனுக்கு தொற்று கிருமிகள் பரவுகின்றது. ஆனால், னைத்து கிருமிகளும் நோயினை உண்டாக்குவதில்லை. கொரோனா வைரஸ் சீனாவின் பரிசோதனை கூடங்களில் இருந்து பரவியதா?

இன்றைய விஞ்ஞான உலகம் மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ளது. அதிலும் அழிவு விடயத்தில் மகவும் முன்னேறியுள்ளது. உயிரியல் முன்னேற்றத்தால் நுண்ணுயிர்கள் கொண்டு போர்தொடுக்க இயலும் என்பது மெய்யே. ஆனால், Covid-19 பொறுத்தவரை மற்ற நாடுகளில் பரிசோதனை செய்யப்பட்டதில் இப்படியான விசயத்திற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்று

அறிவித்துள்ளனர். மேலும் பழந்தின்னி வௌவாலின் மரபணுவே இவ்வைரஸில் காணப்படுகின்ற. ஆகையால், வௌவாலிலிருந்தே பரவியதாக ஏற்றுக் கொள்ளலாம்.

★ **கொரோனா வைரஸ் என்பது என்ன?**

கொரோனா வைரஸ் பல நுண்ணுயிரிகள் போல வாழ்வதில்லை. இவை தமக்கான உயிரி கிடைக்கும் வரை எத்தனை காலமானாலும் காத்திருந்து வாழக்கூடியது. ஏற்ற உயிரி கிடைத்தவுடன் அவ்வுயிரிக்குள் சென்று வாழத்தொடங்கும். எந்த உயிரிக்குள் நுழைகிறதோ அவ்வுயிரியின் ஆற்றலை முழுமையாக அபகரித்துக் கொண்டு வாழும் தன்மையுடையது இவ்வைரஸ்.

தாவரம், விலங்குகுள் மற்றும் பாக்டீரியாக்கள் என எதையுமே விட்டு வைப்பதில்லை இவ்வுயிரிகள் எல்லாவற்றையும் தாக்கும் தன்மையுடையது. இவ்வுயிரிகளில் DNA மற்றும் RNA வைரஸ்கள் என இருவகை உண்டு. இதில் DNA வைரஸ் தாவரங்களையும் RNA வைரஸ் மனிதன் மற்றும் மிருகங்களை தாக்கக் கூடியதாகவும் உள்ளது. இதில் RNA வைரஸ் வீரியமானவை, ஏனெனில் இவை DNA வைரஸை காட்டிலும் விரைவில் புரதச் சேர்க்கையில் ஈடுபடக் கூடியவை.

★ **நாவல் கொரோனா வைரஸ் எங்கிருந்து பரவ ஆரம்பித்தது தற்போதைய உலகளாவிய சூழ்நிலை என்ன?**

2019ஆம் வருடம் நாவல் கொரேனா வைரஸ்ஸெனும் Covid 19 தொற்று வியாதி சீனாவின் ஹூபேய் மாகாணத்திலுள்ள வூஹான் நகரத்தில் இருந்து பரவ ஆரம்பித்தது. இக்கொள்ளை (Epidemic) நோய் 6.3.2020 வரை உலகில் அறுபது நாடுகளில் உள்ள 90,200 மக்களுக்கு மேல் பாதித்துள்ளது. இதில் சீனாவில் மட்டும் 80,000 பேருக்கு மேல் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில் 3000 பேர் இறந்துள்ளனர். சீனா தவிர மற்ற நாடுகளில் 10,000 பேருக்கு மேல் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில் 175 பேர் இறந்துள்ளனர். சீனாவிற்கு அடுத்தபடியாக ஈரானில் 90 பேர், இத்தாலியில் 36 பேர் மற்றும் கொரியாவில் 26 பேர் என உயிர் இறந்துள்ளனர்.

★ **இந்தியாவில் கொரோனா வைரஸ் கொள்ளை நோய் நிலவரம் என்ன?**

கேரளாவில் மூன்று பேருக்கு இத்தொற்று நோய் பாதிப்பு ஆரம்பத்தில் ஏற்பட்டது, அவர்கள் அனைவரையும் கோழிக்கோடு அரசு மருத்துவமனையில் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை அளித்தனர். இவர்கள் அனைவரும் தற்போது முழுமையாக குணமடைந்து வீட்டிற்கு அனுப்பப் பட்டுள்ளனர். 2.3.2020 அன்று மேலும் டெல்லியை சேர்ந்த ஒருவரையும் தெலுங்கானாவை சேர்ந்த ஒருவரையும் கொரோனா வைரஸ் தாக்கியுள்ளது.

★ **கொரேனா வைரஸ் எளிதில் தொற்றக்கூடிய நோய்?**

ஆம் கொரோனா வைரஸ் எளிதில் தொற்றக்கூடிய கிருமிதான். ஆனால், கொரோனா வைரஸ் தாக்கம் ஏற்பட்ட பலருக்கும் நோய் ஏற்படுவதில்லை. இரண்டு சதவீத மக்களுக்கு மட்டுமே நோய் ஏற்படுகிறது. நோய் கொண்ட மக்களில் இரண்டு சதவீத மக்களுக்கே உயிரிழப்பும் இருக்கும்.

★ **இந்தியா சீனாவிற்கு அருகிலிருக்கும் அண்டை நாடாக இருந்தும் ஏன் அதிக பாதிப்புக்கு உட்படவில்லை?**

இதற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன. (Postulated). மேலும் பலருடைய கேள்வியும் அதுவே. காரணங்கள் கீழுள்ளவை. ஆனால், எதுவும் தீர்மானமானவை இல்லை. அவை

★ இந்தியர்களின் மரபணு Co-19 எதிர்க்கும் தன்மையுடையது.

★ இந்திய உணவில் உள்ள உட்பொருளய்கள் நச்சுயிரிக்கு எதிரான தன்மையினை உடையது.

★ நம் உணவிலுள்ள அதிகளவு மிளகாய் பயன்பாடு C-19 ஏற்படும் நுரையீரல் தொற்றினை தடுக்க காரணமாக இருக்கலாம்.

★ இந்தியர்களின் கலாச்சாரமான கைகளை அலம்புதல் மற்றும் தினசரி குளியல் கூட முக்கியமான காரணமாகும்.

★ இந்தியர்கள் சூடான உணவினையே உட்கொள்கிறார்கள். மேலும் தங்களது உணவினை ஒரே தட்டில் இட்டு பகிர்ந்து உண்பதில்லை. இதுவும் இத்தொற்று பரவாமல் இருப்பதற்கு காரணமாக இருக்கலாம்.

★ இந்தியர்கள் வணக்கம் சொல்லும் பண்பாட்டினை உடையவர்கள், கை குலுக்கும் பண்பாடு அதிகம் இருப்பதில்லை.

★ இந்தியாவின் சீதோஷண நிலை சீனாவை காட்டிலும் மிக வெப்பமானது. அதுவே இவ்வைடூரியை அழிக்கலாம்.

★ இந்தியர்கள் சீனர்களை போல் அதிகமாக அசைவ உணவினை உண்பவர்கள் இல்லை. மேலும் இந்நோய் பரவுதலின் பீதியால் மேலும் மக்கள் அசைவ உணவினை தவிர்ப்பதும் காரணமாக இருக்கலாம் என்று புள்ளி விவரம் கூறுகிறது.

★ **Covid-19 வைரஸ் பாதிப்பின் அறிகுறிகள் என்ன?**

மிருகங்களில் அதிகமாக குடல் மற்றும் வயிறு சம்மந்தமான உபாதைகளை ஏற்படுத்தும் இவ்வைரஸ் மனிதர்களில் அதிகமாக நுரையீரல் சம்மந்தமான உபாதைகளையே ஏற்படுத்தும். மனிதனில் இவற்றின் அறிகுறிகள் காய்ச்சல், சோர்வு, பசியின்மை, தொண்டை வலி, சளி, இருமல், மூச்சு விடுவதில் கஷ்டம், பேதி மற்றும் வாந்தி ஆகியவை.

★ **Covid-19 வைரஸ் பாதிப்பு எவ்வாறு உயிர்க்கொல்லியாக மாறுகிறது?**

Co-19 வைரஸ் பாதிப்பால் உயிர் இழக்கக் கூடியவர்களில் 83 சதவீதத்தினர் Acute Respiratory Distress Syndrome எனும் ARDS இதனால்தான் உயிர் இழக்கின்றனர். 47 சதவீதத்தினருக்கு Co-19 வைரஸ் நிமோனியா காய்ச்சல் உண்டாக்கும் இதனாலும் உயிரிழப்பு ஏற்படும். சாதாரண மாக வெறும் சளி காய்ச்சல் போன்றவற்றை மட்டுமே அதிகமாக ஏற்படுத்தக் கூடிய Co-19 வைரஸ் நோய் எதிர்ப்பு குறைவாக உள்ளவர்களுக்கு உயிர்கொல்லியாக மாறுணுகிறது. நீண்டகால நுரையீரல் நோய் மற்றும் சிறுநீரக நோய் பாதிப்பு உடையவர்கள், வயதில் முதிர்ந்தவர்கள், நீரிழிவு நோய் (Diabetes Mellitus), உயர் இரத்த அழுத்தம், உடல் பருமன், பிரசவம் மற்றும் இருதய கோளாறினால் பாதிக்கப்பட்டவர்களின் உயிர் கொல்லியாக இந்நோய் உள்ளது.

★ **கொரோனா வைரஸ் இருக்கின்றதா எனும் பரிசோதனையை எப்பொழுது மேற்கொள்ள வேண்டும்?**

சீனாவிலுள்ள ஹூபேய் மாகாணத்திலிருந்து வருபவர்கள் மற்றும் வூஹான் நகர் சென்று வந்தவர்களை அவசியம் பரிசோதனை செய்ய வேண்டும். தற்போதைய நிலவரப்படி சீனாவிலிருந்து வரும் அனைத்து பயணிகளையும் பரிசோதனை செய்யப்பட வேண்டும். தற்போது அறுபது நாடுகளில் பரவியுள்ள இவ்வைரஸ் அதிகமாக பரவியுள்ள மற்ற நாடுகளான இத்தாலி,

ஈரான், கொரியா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளிலிருந்து வரும் நபர்களையும் பரிசோதனைக்கு ஆட்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

★ **Covid-19 வைரஸ் நோயினை குணப்படுத்த மருத்துவம் உள்ளதா?**

இதுவரை இந்நோயினை குணப்படுத்த குறிப்பிட்ட மருத்துவம் எதுவும் கண்டுபிடிக்கப் படவில்லை. ஆனால், உடலிலுள்ள நீர்சத்து அதிகரிக்க IV Fluids, மூச்சுவிட கஷ்டப்படு பவர்களுக்கு ஆக்ஸிஜன் பொருத்துதல் மற்றும் இதர கூடுதல் மருத்துவமான நெபுலைசர் தெரப்பி போன்றவை மட்டுமே உள்ளது.

★ **மற்ற நுண்ணுயிர்களை அழிக்க ஆன்டிபயாடிக்குகள் உள்ளதுபோல் கொரோனா வைரஸ்ஸை அழிக்க ஆன்டிபயாடிக் கண்டுபிடிப்பது குதிரைக்கொம்பா?**

ஆம் கொரோனா கிருமிகளை அழிக்கக்கூடிய மருந்தை கண்டுபிடிப்பது குதிரைக் கொம்பே. பல பாக்டீரியா மற்றும் பூஞ்சான்களை அழிப்பதற்கு ஆன்டிபயாடிக்குகள் உள்ளது. ஏனெனில் பாக்டீரியாக்களும் பூஞ்சான்களும் தன்னைத் தானே பெருக்கிக் கொள்ளும் தன்மை உடையது. ஆகையால், இந்த நுண்ணுயிரிகளை ஆன்டிபயாடிக்குகள் கொண்டு கொன்றால் போதும் நோயினை குணப்படுத்தலாம். ஆனால் கொரோனா வைரஸ் போன்ற வைரஸ் கிருமிகள் எந்த உயிரிக்குள் நுழைகிறதோ அதன் DNAவை கைப்பற்றி தம்முடைய DNA போல் மாற்றி அமைத்துக் கொள்ளும். உதாரணமாக மனித உடலுக்குள் புகுந்தால் மனித DNAவை கைபற்றி தம் DNA போல் மாற்றி அமைத்துவிடும். இதனால் நம் உடலின் செல்களே வைரஸ்ஸினை போல் செயல்படும். ஆகையால், இதற்கு எடுத்துக் கொள்ளும் ஆன்டி வைரஸ் மருத்துவம் நம்முடலின் செல்களையும் பாதிக்காத வகையில் மருந்தினை கண்டுபிடிக்க வேண்டியது விஞ்ஞானிகளின் கடமையாகிறது. அதனாலேயே வைரஸ் கிருமிகளுக்கு எதிரான மருந்துகள் கண்டுபிடிப்பது கடினமாகிறது.

★ **கொரேனா வைரஸ் ஒரு உயிர் கொல்லி நோயா?**

வைரஸ் தொற்று உடைய அனைவருக்கும் நோய் ஏற்படுவதில்லை. நோய் உடையவர்களில் 97-98% மக்களுக்கு சாதாரண சளி, தொண்டைவலி, காய்ச்சல் மற்றும் மூச்சு விடுதலில் கடினம் போன்ற அறிகுறிகளே இருக்கும். 2-3% மக்களுக்கு மட்டும்தான் உயிர்கொல்லியாக மாறும்.

★ **கொரோனா வைரஸ் ஏன் சீனாவில் முதலில் பரவு ஆரம்பித்தது?**

சீனாவின் சீதோஷண நிலையும் சீன மக்களின் உணவு பழக்கங்களே பல வைரஸ் தொற்று நோய் ஏற்பட காரணமாக அமைகிறது. அதிலும் கொரோனா வைரஸ் தொற்று மேற்கூறிய காரணங்களால்தான் அதிகமாக பரவும். சீனா குளிர்பிரதேசமாகும் அதிலும் கொரோனா வைரஸ் அதிகமாக இருக்கும் வூஹான் மாகாணம் 0-6% செல்சியஸ் வெப்பநிலையே நிகழும். குளிர் பிரதேசங்களில் இந்நோய் அதிகமாக பரவும். மேலும் சீன மக்கள் பாதி வேகவைத்த மற்றும் வேக வைக்காத மாமிசங்களை உட்கொள்ளும் பழக்கம் உடையவர்கள் அதுவே இந்நோய் பரவ காரணமாகவும் இருக்கலாம்.

★ **எவ்விதமான இடங்களில் கொரோனா வைரஸ் வேகமாக பரவுகிறது?**

திருவிழாக்கள், மக்கள் கூடும் இடங்கள், ஏ.சி. மால்கள், ஏ.சி. டிபார்ட்மெண்ட் ஸ்டோர்கள் மற்றும் ஏ.சி. அறைகளிலுமே கொரோனா வைரஸ் வேகமாக பரவுகிறது.

கொரானா வைரஸ் காற்றின் மூலம் பரவாது. தும்மல் இருமலில் தெறிக்கும் droplets மூலம் பரவுகிறது. ட்ராப்லெட்ஸ் பட்ட கைகளால் முகத்தை துடைக்கும்போது கண், மூக்கு, வாய் வழியாக நுழைந்து பாதிப்பை ஏற்படுத்தும்.

மாஸ்க் அணிவதால் கொரானா வராமல் தடுக்க முடியாது. உண்மையில் மாஸ்க்கை சரிசெய்ய கைகளைப் பயன்படுத்துவதால் அதன் மூலம் தொற்று ஏற்படவே வாய்ப்பு அதிகம். ஆனால், நம்மிடமிருந்து மற்றவர்களிடம் பரவாமல் இருக்க மாஸ்க் பயன்படும்.

★ **Covid-19 வைரஸ் கிருமியினால் அதிக உயிர் இழப்பு ஏற்படுகிறதா?**

சாதாரணமாக சளி உண்டாக்கும் ரைனோ வைரஸ் மற்றும் இதர கொரோனா வைரஸ் போல் Covid-19 வைரஸ் நோயின் பாதிப்பு இருப்பதில்லை. மற்ற வைரஸ்கள் மேல் மூச்சு குழாயில் தொற்று வியாதி (Upper respiratory tract infection) உண்டாக்கும். ஆனால், Covid-19 வைரஸ் கீழ் மூச்சுக்குழாய் தொற்று வியாதி (Lower respiratory tract infection) உண்டாக்கும். அதனால் மற்ற வைரஸ் போலில்லாமல் சளி, இருமல் அதிகமாக இருக்கும். மேலும் நுரையீரல் தொற்று உண்டாக்குவதால் நியுமோனியா காய்ச்சல் ஏற்படுத்தும். சாதாரண வைரஸ் நியுமோனியா காய்ச்சலுக்கு மருத்துவம் தருவது போல் தந்தாலே நோயினை பலருக்கும் குணப்படுத்தலாம். ஆனால், சீக்கிரமாக மற்றவர்களுக்கும் பரவும் தன்மையுடையதால் தனிப்பிரிவில் வைத்துதான் மருத்துவம் பார்க்க வேண்டும். Covid-19 தொற்று வியாதி உள்ளவர்களில் சிலருக்கு தீவிரமான நியுமோனியா மற்றும் மூச்சு விடுவதில் கடினம் ஏற்பட்டு செப்டிக் நியுமோனியா காய்ச்சல் ஏற்படும். இவர்களே உயிரிழக்க நேர்கிறது. நூறு பேருக்கு இந்நோய் ஏற்பட்டால் சரியான மருத்துவம் தரும் பட்சத்தில் இரண்டிலிருந்து மூன்று பேருக்கு உயிரிழப்பு நேரலாம். ஆக, மார்ட்டாலிடி ரேட் எனும் இறப்பு சதவீதம் 2-3% மட்டுமே. ஆகையால், தவறான வதந்திகளால் மக்கள் பீதி அடைய தேவையில்லை.

★ **Covid-19 வைரஸ் ஏன் இவ்வளவு சீக்கிரமாக பரவுகிறது?**

இந்த வைரஸ் கிருமி சீக்கிரமாக தொற்றக்கூடிய ஒரு கிருமி வகை ஆகும். இந்த கிருமிகளை உடைய மனிதர் இருக்கும் இடத்திலுள்ள மற்றவர்களுக்கு வெகு வேகமாக பரவும் தன்மை யுடையது. இந்த வைரஸ். ஆகவே, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளே இந்த நோயிலிருந்து மனிதர்களை காப்பாற்ற முடியும்.

★ **ஜப்பான் கொரோனா வைரஸ் பாதிப்புள்ளவர்கள் தமது கப்பலில் இருந்ததால் நீண்ட நாட்களாக நாட்டுக்குள் வராது கடலிலயே இருந்தது சரியா?**

நிச்சயமாக சரியே. ஏனெனில், எந்த வைரஸ் கிருமி பாதிப்பு ஒருவருக்கு உள்ளது என்று தெரிந்த பின்னர் அவரை தனிமைப்படுத்துதல் (Quarantine) வேண்டும். அது போலவே கப்பலில் உள்ள மாலுமிகள் சிலருக்கு இவ்வைரஸ் கிருமியால் ஏற்பட்டுள்ளது என்று தெரிந்த பின்னர் அவர்கள் முழுமையாக குணமடையும் வரை நாட்டிற்குள் வராதவாறு ஜப்பான் அரசு பார்த்துக் கொண்டதன் மூலம் நாட்டுக்குள் பரவாமல் தடுத்துக் கொண்டது. எந்த வைரஸ் கிருமியானாலும் குறைந்தது இருபத்து எட்டு நாட்கள் வைரஸ் பாதிப்பு ஏற்பட்ட மனிதரை தனிமைப்படுத்துதல் வேண்டும். அவ்வகையில் தான் ஜப்பான் அரசு நடந்துக் கொண்டது.

★ **இந்தியாவில் ஏன் கேரளாவில் முதலில் வந்தது?**

சீனாவின் வூஹான் நகரத்தில் படித்த கேரளத்தைச் சேர்ந்த மாணவர் மூலமாக முதன் முதலாக கேரளத்திற்குள் இவ்வைரஸ் வந்தது. இதுவரை மூன்று பேர்கள் பாதிக்கப்பட்டனர். இவர்களை அரசு மருத்துவமனையின் தனிப்பிரிவில் மருத்துவம் பார்த்து அவர்களுக்கு முற்றிலும் வைரஸ் பாதிப்பு இல்லை என்று அறிந்து கொண்ட பின்னரே டிஸ்சார்ஜ் செய்தது கேரள அரசு. இவ்வகையில் சிறப்பாக செயல்பட்டதின் மூலமாக மேலும் இவ்வைரஸினால் மக்கள் பாதிப்படையாதவாறு பார்த்துக் கொண்டது கேரள அரசு. இதற்கு நிச்சயமாக கேரள அரசினை பாராட்ட வேண்டும்.

★ **இந்நோயிலிருந்து நம்மை நாம் எப்படி பாதுகாத்துக் கொள்ளலாம்?**

நோய் வந்தப் பின் மருத்துவம் செய்வதை காட்டிலும் நோய் வராமல் தடுப்பதே சாலச் சிறந்தது. இந்நோய்க்கு எதிராக மருந்து இல்லாதது குறையே. ஆனால், இந்நோய் வராமல் பாதுகாத்துக் கொள்ள இயலும். மூன்று "H"யை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

★ Hand wash (கை கழுவுதல்)
★ Hand sanitizer (கை சுத்திரிப்பான்)
★ Hands of face (முகத்திலிருந்து கையை தூர வைத்துக் கொள்ள வேண்டும்).

இருபது விநாடிகளுக்கு சோப் போட்டு கையினை சுத்தமாாக கழுவ வேண்டும். கை கழுவுதல் உணவு சமைக்கும்போது, உணவு உட்கொள்ளும் முன்னர், உணவு உண்ட பின்னர், கழிவறைக்கு சென்று வந்த பின்னர், வீட்டிற்குள் நுழைந்தவுடன் மற்றும் இருமல் மற்றும் தும்மல் பின்பு என பல சமயங்களிலும் இருக்க வேண்டும். இதன் மூலமாக இக்கிருமிகளை அழிக்கலாம். ஒரு நாளைக்கு பதினைந்திலிருந்து இருபது முறை கையை அலம்ப வேண்டும்.

கை கழுவ முடியாத இடத்தில் கை சுத்திகரிப்பான் மூலம் நம் கைகளை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

மூக்கு, வாய் மூடி மற்றும் காதுகளை அடிக்கடி நம் கைகளால் தொடக்கூடாது. ஏனெனில் வெளியே செல்லும்போது பொது வெளியில் கதவினை திறப்போம். லிஃப்ட் பட்டனை அமுக்குவோம், மாடி ஏறும்போது பக்க கைப்படிகளை தொடுவோம். இவ்விடத்தில் கொரோனா வைரஸ் இருக்கும் பட்சத்தில் நாம் முகத்தினை தொடும்போது நாம் இக்கிருமிகள் நமக்குள் புகுவதற்கு காரணமாகிறோம். ஆகையால் கைகளால் முகத்தினை தொடுதலை தவிர்க்க வேண்டியது அவசியம்.

★ **இந்த வைரஸ் எவ்விடத்தில் எவ்வளவு நேரம் உயிர்ப்புடன் இருக்கும்?**

★ நம் கைகளில் பதினைந்து நிமிடங்கள் உயிர்ப்புடன் இருக்கும்.
★ கைகுட்டை மற்றும் நாம் உடுத்தும் துணிகளில் இரண்டு மணி நேரம் உயிர்ப்புடன் இருக்கும்.
★ கதவுகளிலும் தரைகளிலும் இரண்டு நாட்களுக்கு உயிர்ப்புடன் இருக்கும்.

★ **இந்த வைரஸ் பரவாதிருக்க என்ன செய்ய வேண்டும்?**

அறைகளின் இருக்கும்போது முடிந்த மட்டிலும் ஏ.சி. போடாது கதவும் சன்னலும் திறந்து வைத்திருக்க வேண்டும். இதன் மூலம் குறுக்கு காற்றோட்டம் (Cross ventilation) இருக்கும். இது இவ்வைரஸ் பரவுதலை தடுக்கும்.

வீட்டிலும் அலுவலகத்திலும் சளி காய்ச்சல் போன்ற தொந்தரவுகள் உள்ளவர்கள் அருகில் இல்லாதிருப்பது நன்று. வெளியிடங்களில் சளி இருமல் மற்றும் காய்ச்சல் உடையவர்கள் முகமூடி (Facemask) அணிந்துக் கொள்ள வேண்டும். மேலும் மேற்கூறியவர்கள் பொது வெளியில் நடமாடாது வீட்டிலேயே இருப்பது சாலச்சிறந்தது.

பொது இடங்களில் கூட்டம் சேரும்போது இருவருக்கிடையே குறைந்தது ஒரு மீட்டருக்கு மேல் இடைவெளி இருக்க வேண்டும். அதே சமயம் மூன்று மீட்டர் இடைவெளி இருந்தால் நிச்சயமாக இக்கிருமி ஒருவரிலிருந்து மற்றவர்களுக்கு பரவாது.

வணக்கம் சொல்லுங்க கை குலுக்குவதை தவிர்த்திடுங்க. கூட்டமான பகுதிகளை முடிந்த மட்டிலும் தவிர்த்தல் நல்லது. காரமடை தேர் கோயில் திருவிழாக்களில் கலந்து கொள்பவர்கள் முடிந்த மட்டிலும் கை குலுக்குவதை தவிர்த்திட வேண்டும். சளி இருந்தால் தேர் திருவிழாவிற்கு செல்லாதிருத்தல் நல்லது. மேலும் சளி இருமல் காய்ச்சல் இல்லாதவர்கள் வராமல் தடுத்துக் கொள்ள மேற்கூறிய விடயங்களை கடைபிடிக்க வேண்டும்.

எவராகினும் இருமும் போதும், தும்மும் போதும் கைகுட்டையினை வைத்து மறைத்துக் கொண்டு இருமவோ தும்மவோ வேண்டும். கைகுட்டை இல்லாதபட்சத்தில் கைகளை மடக்கி முழங்கை அக்குளில் இருமவோ தும்மவோ செய்யலாம்.

★ **கொரேனா அறிகுறிகள் இருந்தால் என்ன செய்ய வேண்டும்?**

நாமாகவே மருந்துகள் எடுத்து கொள்வதை தவிர்க்க வேண்டும். மேலும் காலம் தாழ்த்தாது உடனடியாக மருத்துவம் பார்க்க வேண்டும். இந்தியாவில் தனியார் மருத்துவமனையில் மருத்துவம் பார்க்கக் கூடாது. அறிகுறிகள் இருந்தால் அருகிலுள்ள அரசு மருத்துவமனையில் மருத்துவம் பார்த்து கொள்ள வேண்டும். இதுவரை கொரோனா பரவுதலை இந்திய அரசு மற்றும் இதர மாநில அரசுகளும் முடிந்த மட்டிலும் சிறப்பாகவே செய்து வருகிறது.

★ **பாரம்பரிய மருத்துவம் கொரோனா வைரஸ் மருத்துவத்திற்கு உதவுமா?**

இதுவரை எந்த மருத்துவ பிரிவும் கொரோனாவிற்கு எதிராக மருத்துவம் கண்டுபிடிக்க வில்லை. ஆனால், சமூக வலைதளங்களில் இதை சாப்பிடுங்கள் அதை சாப்பிடுங்கள் என்பதை போல பல தகவல்கள் வரும். அவற்றை பொருட்படுத்தாது அறிகுறிகள் இருந்தால் உடனடியாக அரசு மருத்துவமனைக்கு சென்று மருத்துவம் பார்ப்பது சாலச்சிறந்தது...

வாழ்க நலமுடன்

**சந்தாதாரர்கள் - உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் கவனத்திற்கு**

நமது சங்க இதழான **"எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்"**-ல் தங்களது கருத்துகள், கட்டுரைகள், தங்கள் வட்டத்திற்குட்பட்ட தொழிலாளர்கள் மற்றும் சங்கத்திற்கான செய்திகளை கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்திடுவீர்!

**நிர்வாக ஆசிரியர்,**

**TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்**

39/101, சிங்கண்ணா தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.

**✆ : 9841446621 ❖ tnebemployeesfederation3600@gmail.com**

***குறிப்பு :*** *செய்திகள் வெளியிடுவது ஆசிரியக் குழுவின் முடிவிற்குட்பட்டது.*